# உதயதாரகை.—MORNING STAR.

*Published on the 2d and 4th Thursday of every Month at one shilling a Quarter payable in advance.*

சா. புத். சஞ். சூ.] கூஅ௱சசஹு. பங்குனி மூ. உஅ. தேதி வியாழக்கிழமை, Thursday, March 28, 1844. [Vol. IV. No. 6.


## வீரமாமுனிவர் செய்த ஞானவுணர்ச்சி.

### ஆறுமுணர்த்துதல்.

பாவப்பழக்கத்தால் வருகிற மயக்கங்காண்பிக்கின்றது.

கறுவல் தன்னுடைய உடம்பின் தோலை வெள்ளையாக்குவனென்றால் பாவத்திலே பழகினவன் புண்ணியவாளனாவானென்று யெரேமியென்கிற தீர்க்கதரிசி வசனித்தார். அதேதென்றாற் கறுவலுக்குக்கறுப்பு சுபாவமாயிருக்கிறதினால் அது எடுக்கப் போகாததுபோல பாவநடக்கையிலே பழகினவனுக்கு அதைப் பாவக்கறுப்பு மனசிலே சாதித்திருக்கிறதினால் உடம்பிற்றோல்போல நோவில்லாமலெடுக்கிறது அரிதாமென்று காண்பிக்கச்செய்தார். ஆனாற் பாவியான மனிதர் அதை அறியாமல்த் தாங்கள் அனுபவிக்கிற பாவத்தினாருசியை விடாதபடிக்கு அதைக் கொஞ்சநாள் அனுபவித்தாற் பினனால் விட்டுவிட இலேசாயிருக்குமென்று நினைத்துப் பாவத்திலே நடந்துவருகிறார்கள். இப்படிப்பட்ட எளிதான நினைவினாலே தங்களுக்கு அதிகங் கேடான விலங்கைத் தேடுகிறார்களென்றறியக்கடவார்கள். அதேதென்றால் ஒரு சுத்தியலடியாலறைந்த ஆணியின்மீதே இன்னமும் அடிக்கவடிக்க அந்த ஆணி உள்ளுக்குப் போயிறுகிப் பலகையுடைந்தாலல்லாதே எடுக்க எலுமோ? ஏலாதே. அப்படியே பாவத்தின்மேலே பாவங் கூட்டுகிறவனுக்கு அது அதிகமாய்ப் பெலனாகிறதல்லாதே எடுக்க எளிதாகமாட்டாது. கொஞ்ச நெருப்பை நூற்கமாட்டாதவன் மகா சூடராய் எழும்பினதின் பின் நூற்பதெப்படி? கொஞ்சத்தண்ணீருள்ள ஆற்றைக்கடக்கமாட்டாதவன் வெள்ளம்பெருகின் கடப்பதெப்படி? ஒரு மடிப்புச் சீலையால் மறைந்த கண் ஒன்றுந் தெரியாதிருக்கப் பத்துமடிப்பாய் மடித்துக் கட்டிக் காணலாமென்கிறதைப்பார்க்கப் புத்தியீனமுண்டோ? ஆதலினால் இளமரத்தின் றாரைவேரூன்றுமுன் பிடுங்கிறதல்லாதே வளர்ந்து முற்றினதின்பின் பெரிய கோடாலியடிகளையும் தட்டுவிக்கிறதுபோல உன் பொல்லாத நடக்கைமுற்றினால் அதை விடுகிறதற்கு மிகுந்த தடைகளுண்டாயிருக்குமென்றறியவும்.

அதின் முதலாந்தடையாவது, பாவத்திலே பழகினவனைப் பசாசு தன் அடிமையாக்குகிறதினால எளிதாய்க் கைவிட்டுப்போகக்கொடுக்கமாட்டாது. அதினால் அவனை மூன்றுகதவுள்ள சிறைக்கூட்டத்திலே அடைத்ததுபோல அவன் மனசு திரும்பாதபடிக்கு நெஞ்சிலே ஒரு கதவும் பாவ உச்சாடணம்பண்ணாதபடிக்கு வாக்கிலே ஒரு கதவும் நடக்கை விடாதபடிக்குக் கைகால்களில் ஓர் இருப்புக்கதவும பூட்டிவைக்கும். ஆனதினாற் சுத்தமான பேதுரு அப்போஸ்தலனை யூதர்வைத்த சிறைக்கூட்டத்தில் அம்மூன்று கதவுந் தேவதூதன் பெலத்தாற்றிறந்து புறப்பட்டதுபோலத் தேவ வரப்பிரசாத பெலத்தாலல்லாதே அந்தப் பொல்லாத நடக்கைவிட இலேசாயிராதென்றறியவும்.

இரண்டாந்தடையாவது, பாவத்தின்கசப்புப் பழக்கத்தாற் கசப்பாய்க்காணாமல் இனிப்பாய்த்தோற்றுவதினால் விடலாகமாட்டாது. அது எப்படியென்றாற் கசந்த இலை காய் கனிகளைத் தின்னப்பழகினவனுக்கு அதின்மேலேதானே விருப்பமுண்டாய் நல்ல இரதங்களின்மேற் பிரியமற்றுப்போவதுபோலத் தான் செய்கிற பாவத்தில் எத்தனை தீங்கு துன்பமுண்டானாலும் அது துன்பமாயெண்ணாமல் இரசம்போலே நாடிநடப்பான். ஆனதினாற் களவு குடி சூது வேசிமார்க்கம் முதலான பாவங்களிலே பழகினவன் அதுதுக்காக எத்தனையடிபட்டாலும் எத்தனை சேதம் நிந்தை பழிவந்தாலும் அதை விடமாட்டாமலிருக்கிறான். உள்ளுக்கிருக்கிற பாவப்பழக்கமென்கிற தலைவன் அவர்களுக்குப் பெலன் கொடுக்கிறதினால் அப்படியே துணிகிறார்கள்.

மூன்றாந்தடையாவது, பழக்கமாயிருக்கிற நடக்கையிலே பாவத்துக்குள்ளபயமும் கூச்சமுமற்றுப்போகிறதினால் அதை விடுகிறதற்குக் காரணமாயிராது. அதெட்படியென்றால்சத்தங்கேளாத விடத்திலே நித்திரைகொள்ளுகிறவன் ஒரு உரத்த சத்தத்தால்த் திடுக்கிட்டுக் கண்விழித்தாலும் நித்தமும் இரைகிற கடற்கரையிலே சுகமாய் நித்திரைகொள்ளுகிறவனை என்ன சத்தத்தால் எழுப்பலாம். கொல்லன் கம்மாலையிலே படுக்கிற நாய் இரவும் பகலும் இரும்படிக்கிற சத்தங்களால் அசையாமல் இருக்கிறதுபோலேயாம்.

கடைசியிலே வருந் தடையாவது அப்படிப்பட்டவன் எழும்பவேண்டுமென்று நல்ல நினைவு நினைத்தாலும் அந்த நினைவைப் பழக்கம் அமத்திப்போடுகிறதினால் விடலாயிராது. சேற்றிலே புதைக்கப்பட்டவன் எழும்பத் தெண்டித்து ஒருகால் உயரவெடுக்க மற்றக்கால் புதைக்கப்படுவதுபோலவும் கூட்டிலே அடைபட்ட குருவி நாலுதிக்குஞ் சுற்றியோடிப் பறந்தும் புறப்படமாட்டாததுபோலவும் அவநடக்கைக்காரன் ஒரு நல்ல நினைவால் எழும்பவேண்டுமென்று மேலாசை கிழம்பினாலுஞ் சுகத்திலூன்றியிருக்கிற கீழாசை அத்தை அமத்தி மறுபடியும் பாவத்திலே விழப்பண்ணும். ஆனதினால் அப்படிக்கொத்தவன் எத்தனைமுறை பிரதிக்கினைபண்ணினாலும் மறுபடியும் அதிலேதானே விழுந்து சாகுந்தனையும் விடமாட்டாமல் மகா கேடடைவான். இது கைமெய்யாய் ஒருவனுக்குச் சம்பவித்ததைப் பார்.

தொலேதென்கிற இராச்சியத்திலே ஒரு பேர்போந்த மனிதன் தன் வெந்துசனமாயிருந்த ஒரு ஸ்திரியை வைப்பாட்டியாக வைத்து எத்தனைபேர் புத்திசொன்னாலுங் கேளாமற் பாவத்திலே நடந்து வருவான். அப்போது சருவேசுரன் அவனுக்குப் பயங்கரம் வருவிக்கவேண்டுமென்று அவன் பாவத்துக்கு டுத்தீர்த்தபேரைக் காட்சியாக ஒரு புண்ணியவதியான கன்னிஸ்திரிக்குக் காண்பிக்கச்செய்தார். அதெப்படியென்றால் நடுவான் அவனை நரகத்திலே தள்ளத் தீர்வையிடுகிறதாகவும் அதற்குத் தேவமாதா மன்றாடி முப்பதுநாளவதிக்குப் பொறுதிகேட்டு அடைந்ததாகவுங் கண்டு அதைப் பாவ உச்சாடணங் கேட்கிற குருவுக்கு அறிவியென்ற கட்டளையைக் கேட்டாள். அந்தப்படி அவள் கண்ட தரிசனம் ஒரு குருவானவரைக் கொண்டுபோய் அந்தப் பாவவாளனுக்கு அறிவித்தவுடனே அவன் பயந்து பாவ உச்சாடணம்பண்ணித் தான் படுக்கிற அறைவீட்டைவிட்டு வேறே வீட்டிலேபோய் விலகியிருந்தான். ஆனால் அந்தப் பாவவாளி அவன் இருந்த வீட்டிலும் போய்க் கதவுதிறந்து முறைப்பாடுசொல்ல அவன் மனதிழகி மறுபடியும் பாவத்திலே விழுந்தான். இப்படி இரண்டு மூன்றுமுறை பிரதிக்கினைபண்ணி மறுபடியும் அவனைக் கண்ட நேரமெல்லாம் பாவம் விடாமற் குருவானவரைப் போகவிட்டான். முப்பதாநாளிலே குருவானவா பார்க்க வந்தவிடத்திலே பேச இடங் கொடுக்கவில்லை. அந்தராத்திரி நடுச்சாமத்திலே சாகிற அவத்தையாயிருக்கிறதைக் கண்டு வீட்டுக்காரர் குருவானவரை அழைத்துவர அவன் போய் முகதரிசனங்கண்டு ஐயையோ என்னெஞ்சைப் பிடுங்கினார்களென்றபையமிட்டுப் பசாசுகையிலே ஆத்துமத்தைக் கையளித்தான். இப்படியே பழக்கத்தின் கட்டுக்களை அவிழ்த்தல் எத்தனை அருமையென்பதைப்பார். ஒவ்வோரடி முன்னுக்கு நடக்க ஒவ்வொரு பாவச்சுருக்குத் தன் காலிலே விழுந்து நரகத்துக்கிழுக்குந்தனையும் விடமாட்டாது. ஐயோ பாவியே! நீ இப்படிப்பட்ட விலங்குகளை ஏனுன் கால்களிலே பூட்டுகிறாய்? ஏன் பழக்கத்தின் கட்டிலே உன்னைக் கட்டிவைத்து ஒருக்காலும் எழும்பாதபடிக்குப் பண்ணுகிறாய்? பாவமயக்கப் படலங்களை ஞானவஞ்சனத்தால் அறுத்துச்செய்த பாவத்துக்காக விதனப்பட்டுப் பிராத்தித்துக்கொள்.

தாயாதிக மனஸ்தாபஞ்சொல்லவும்.
ஆறுமுணர்த்துதல் முற்றுப்பெற்றது.

---

## பேரின்பக்காதல்.—மனஸ்தாபம்.

இந்தநன்றியெல்லாம் யானறியாதும்முடைய
சிந்தைக்கருவருக்குந் தீவினையைச் செய்தேனே.

என்னன்பே கத்தாவேயெங்கோவேஉம்மைமுழுக்
கன்னெஞ்சர்யூதர்கையிற் காட்டிக்கொடுத்தேனே.

நிந்தைபலசொன்னேனே நீண்டசிலுவையில்வைத்
தந்தமுறுங்கைகாலில் ஆணியறைந்தேனே.

எல்லாமடியே னிருநிலத்திலேபுரிந்த
பொல்லாதவையே புரிகின்றதித்தனையும்.

ஆவத்தையைபுரிந்த வன்பையறியாதுபவம்
நாளுக்குநாட்புரிந்தா னானுமக்குநல்லவனோ?

எல்லாத்துயரநினைத் தென்மனதுதானுருகாக்
கல்லாயிருந்தாற் கரையேறப்போறேனோ.

நன்முகத்தைப்பார்க்கவுள நாணியுறக்கவிழ்ந்தா
லென்முகத்தைக்கண்டாவிரக்கமுமக்குண்டாமோ.

சிந்தையுடனீரெமக்காய்ச்செத்ததிருச்சாவுகண்டா
லிந்தவுலகந்தனிலே யானிருக்கநீதியுண்டோ.

தேவனகம்பிளந்து செங்குருதிக்காட்சிகண்டு
பாவக்கடலமிழ்ந்திப் பாதகத்தைச் செய்தேனே.

நிற்பந்தத்தோடெமக்காய் நீர்சிலுவைமீதிருக்க
வற்பன்றனக்குலக வாசைவரமாட்டாதே.

தெய்வீகச்சோதி திருச்சாவையானினைந்தா
லையோவெனக்குலக வாசைவரமாட்டாதே.

பாவிமனத்தச்சாயிப் பாடுகளெல்லாம்பதிந்தாற்
பூவுலகிலின்பம் புணரப்பொருந்தாதே.

மாசில்லான்பட்டவவ மானமதைச்சிந்தைசெய்தா
லாசையுலகிலெனக் காங்காரம்வாராதே.

பாவிகளுக்காயுலகிற் பட்டதிருப்பாடுகண்டாற்
சீவனளவும்பவத்தைச் செய்யமனஞ்செல்லாதே.

கத்தன்பொறுத்தபிழை கண்டாலருந்துயர
மெத்தனைவந்தாலுமெனக் கேடாகத்தோற்றுதே.

---

## பஞ்சதந்திரக்கதை.

### ஐந்தாவது—அசம்பிரேட்சியகாரித்துவம் அல்லது ஆராயாது செயல்.

சோமசருமனரையன் மக்களை நோக்கி யாவனொருவனுடைய தீச்செயல்களைக் கண்ணுற்றாயினுஞ் செவியுற்றாயினும் அறிவுடையோன் அதைப் புரியலாகாது. அங்ஙனமாகையில் வெள்ளறிவனென்னும் பெரிய ஒரு மயிர் வினைஞன் மணிபத்திரனென்போன் அது கருமங் கண்டுழித்தேராமல் அங்ஙனம் புரிந்திடருற்றனனென அதைக் கேள்வியுற்ற விளங்குமாரரஃதெவ்வாறியம்புதியென வினாவ வாசிரியனுரைக்கலாயினான்.

அவாசிக்கண்ணதாயபைடண புரிவாசியாகிய மணிபத்திரனென்போனன்னெறிபற்றியொழுகலானுளதாய நல்குரவாற் பரிபவமுற்றிவ் வறுமை கெட்டது சீச்சீ—ஏனெனின்—தயை சாந்தி முதலாகிய குணங்கள் பொருளில்லாதாரிடத்தில் விபரீதமாகத்தோன்றுகின்றனவென்று கணந்தோறுமாகுலித்துக் குடும்பப் பாதுகாப்பினானேக்கத்தினாலறிவுமழுக்கமடைகின்றது. தானிய முதலிய பொருளிலாவீடிடு காடொக்குமவன் கல்வி முதலிய குணச் சிறப்புற்றோனாயினு மனிதரெண்ணிக்கையிலுறானிங்ஙனம் பல வகைத்தாயகவற்சி மிடிமையினானெய்துகின்றதாகலான்பட்டினியிருந்துயிர் துறப்பலெனத் துணிந்து மணிபத்திரன்கண்வளர்கையிற் பதும நிதி—நீத்தோன்படிவமாய் அவன் கனவிலடைந்தியானுன் ஒழுக்கத்தாற் கட்புலனாக நாளை இவ்வுருவத்தோடு வருவேன் அப்போதென் சென்னி மேற் றண்டத்தாற் புடைப்பையாயின் யான் குன்றாப்பொற்குவையாவேனெனக் கேட்டவன்றுயிலொழிந்திக் கனவு உண்மையோவன்றேலிஃதெப்போழ்தும் எமக்குளதாயபொருட் சிந்தையின்றோற்றமோவென்றிங்ஙனம் மறு நாட் கருதிக்கொண்டிருக்குங் கால் இரவிற் கண்டாங்கு வந்தவநீத்தோனைக் கண்டு நிகழ்ந்த கனவு மெய்யெனத் துணிவுற்றவன் சிரமேலோர்தண்டங்கொடு தாக்கவவன் பொன்மயமாவொளி விட்டு நின்றமையாலொன்றிற் பொதிந்து வீட்டில் வையா நிற்புழிய அவனில்லாட்குங் களைந்து கொண்டிருந்த மயிர் வினைஞனை நோக்கி உனக்குச் சிறிதருத்தந் தருவேன் இவ்வற்புதத்தை எங்கணுஞ் சிறிதும் புலப்படுத்தற்கவென வற்புறுத்தி விடுக்க அவன் அந்நெறி நிற்பலென மேற்கொண்டு வீட்டிற் சென்றறிவின் சிறுமையாற்றன்னுளாராயவாயினான்.—அஃதெங்ஙனமெனின் - வைகறையிலொரு துறவியை அழைத்து வந்தன்னோன் மண்டையிற் கோல்கொண்டறையினவன் சுடர் விரிபசும் பொனாவானெனத் தேறி மற்றை நடுறவிகள் குழுவிற் சென்று மிக வணங்கி நீவிரெத்திறத்தோர்க்கும் அறிவுணர்த்திக் கரையேற்றா நிற்கின்ற நீர் மற்றும் எவரெவரில்லத்தும் பிச்சைக்கேகா நிற்கின்றீர். ஆயினித்தின நாயினேன் சிறு குடிலுக்குத் தேவரீர் திருக்கூட்டத்தோடெழுந்தருளீராகவென அவர்களிற் றலைவன் இம் மாசு தீர்ப்போனை நோக்கி நாடோறும் அந்தணர் உன் மனைக்கு வரா நிற்க நீ இற்றைக்கெமக்கேன் இயம்புகின்றனையவ்வேதியரையே அழையாயென—அக்காலை நாவிதனும் மாட்டுப்பேரறச் செயல்கள் இருக்கின்றமையானறிகின்றேனாகலானீவிரென் வேண்டுகையையெட்டுணையுமறுமற்றிருவுளம் வைத்தருள்வீரெனப் பணிவாக மொழிந்தவர் கரத்தைப் பற்றியில்விற் கொடுவந்தம்முனியின் கபாலத்திலுலக்கையாற் சாத்தினவளவிலவன் கனைத்து நிலத்தில் அடியற்ற பனைபோல வீழ்ந்தனனிதற்குட்ட பசிக்குழாம் வந்து மெய்ம் மறந்து இடக்கனறவனைப் பார்த்தளவிற் பேரிரைச்சலிடவிக்கலிபலியை அவ்வூராள்வோன் காலாட்கள் கண்டாண்டெய்தி அந்நாவிதனைப் பிணித்துத் தன்றலைவன்பாற் கொடுபோய்விடவவ்வூராளி மஞ்சிகனை நோக்கி இஃதென் செய்தனை யென வுறுக்கி வினாவவம்மங்கலன் மணிபத்திரனகத்துக்கண்டாங்கியான் செய்தனனென அத்தலைவன் அவ்வணிகனை விளித்துன்பாணிகழ்ந்ததென்னையோவென வவன் ஒன்றும் உரையாதிருந்தனனதன் மேல் அதிகாரத் தலைவன் அம்பட்டனைப் பார்த்திவனாராயாமலிக் கருமம் புரிந்தனனாகலா லிவனைக் கழுவேற்றுக—இங்ஙன முன்னொரு பார்ப்பினி பராமரிசியாமலியற்றின கருமத்தான் மூங்காவைக் குறித்தாகுலித்தாளென மணிபத்திரனிஃதெங்ஙன மருள்வாயெனவவ்வூராளிசொல்வானாயினான்.

(இன்னும்வரும்)

---

## நீதியதிபதி.

[Translation of the Article "The Just Judge" on page 56.]

இங்கிலாந்து தேயத்துக்குக் கிழக்குப் பக்கமாய் வருடம் அஞ்ஞூறு பவுண் வரவுள்ள ஆஸ்தியையுடைய ஒரு துரைக்கு இரண்டு குமாரர்களிருந்தார்கள். அவர்களில் மூத்தவன் நாடோடித்தனமாய்ப் பரதேயம்போய் வெகுவருடத்தின் பிறகு பிதாவுங் காலஞ்சென்றுபோய்விட அவருடைய இளைய மகன் தன் தமையனுக்கு வருமதியான ஆஸ்திக்குந் தானே முதலாளியாகும்பொருட்டுத் தனது சகோதரன் வெகுகாலத்துக்கு முன் காலஞ்சென்றுவிட்டானென்று சகல தேயத்தவர்களுக்கும் அறியப்பண்ணி அதற்குச் சாட்சிசொல்லும்படி அனேகங் கள்ள ஒப்பனைகளைக் கைக்கூலி கொடுத்துச் செப்பனிட்ட கருமத்தைத் தன்தேயந் துறந்து பரதேயஞ் சென்ற தமையனறிந்து யாதோராதரவற்றோனாய்த் தன்னூர்வந்து சேர்ந்த வேளையில், தன் தம்பியால் அவமதியாய் நடத்தப்பட்டதுமன்றி இவன் ஒரு எத்தனென்று இவன் தம்பி நாலுபேரும் அறியச் சொல்வித் தன்னுடன் பிறந்த தமையன் வெகு காலத்துக்கு முன் காலஞ் சென்றுவிட்டதற்கு அனேக சாட்சிகளுமுண்டென்று சொல்லி அவன் ஆஸ்தி முழுவதையுந் தானே அபகரித்துக்கொண்டான். ஆஸ்தியை இழந்தவன் தனக்கு யாதொரு ஆதரவுமில்லாதிருக்கக் கண்டு தனது காரியத்தை ஊர்முழுதுந் திரிந்து முறையிட்டுக் கடைசியாக நியாய சாஸ்திரி ஒருவரிடம் வந்தறிவிக்க அவர் அதை முற்றும் உற்றுக் கேட்டுச்சொன்னதென்னவெனில், "எனக்கு ஏதாகுதல் கொடுக்க உன்னிடத்தில் ஒன்றுக்கும் வழியில்லை. நான் உன் வழக்கை நீதித்தலத்திற் பேசித் தோற்றுப்போனேனேயாகில், அதெனக்கு அவசங்கையாய் இருக்கும். சகல ஆஸ்தியும் ஒப்பனை உறுதிகளும் உன் தம்பி நயத்துக்கே இருக்குது. அப்படிப்போயும் நான் இந்த வழக்கை முன்னின்று பேசுவேன். தோற்றுப் போகட்டும் வென்றுவிட்டேனேயாகில் நீ எனக்கு, ருடுய பவுண் தருவேன் என்று ஒரு உடன்படிக்கைபண்ணிக்கொடுப்பாயோ" என்றார். அவன் அதற்குடன்பட்டுடன்படிக்கைபண்ணிக்கொடுக்க, அந்த நியாயசாஸ்திரி அந்த வழக்காளியுடைய தம்பிக்கு விரோதமாக வழக்கைத் தூரந்து அடுத்த சுப்பிறீங் கோட்டில் விளங்கும்படி ஏற்படுத்தி, ருடுய. பவுண் தனக்கொரு வரவிருக்குதென்றெண்ணித் தன்னாற் கூடியமட்டும் ஆலோசனைபண்ணிக் கடைசியாக இது கருமத்தை இங்கிலாந்தில முதல் அதிபதியாகிய வாட் மத்தேயு ஹேல் என்பவருக்கு அறிவிக்கவேண்டுமென்று அதிசீக்கிரம் லொந்தோமுக்கோடி அந்த வழக்கின் தோரணியை அவருக்கு எடுத்துரைக்க அவர் நீதி

ப் பிரியனானதினாற் சகலத்தையுஞ் செவியுறக் கேட்டுத் தன்னாற் கூடிய அளவு ஏதாகுதல் இது கருமத்தில் ஒத்தாசை செய்வேனென்று நியாயசாஸ்திரிக்கு வாக்குத்தத்தமும்பண்ணிக்கொடுத்து அவனையும் அனுப்பிப்போட்டுச் சொல்லப்பட்ட இந்த வழக்குவிசாரணைபண்ணுவதற்கு முன்னிதாகத் தனது பணிவிடைகள் அனைத்தையும் முடித்தோதுக்கிப் போடும்படி கூடிய பிரயெத்தனங்களைப்பண்ணிக் கடைசியாகக் குதிரையிலேறிக்கொண்டு வழக்குவிளங்கப்படுந் நியாயத்தலத்துக்குச் சற்றே எட்டதத்தில்நின்றுகொண்டு தனது ஆட்களையுங் குதிரைகளையும் அனுப்பி, மாவரைக்கும் ஒரு திரிகைக்காரன் வீட்டிற் சென்று அவனுடனே சிறிது நேரமாக இதமான வார்த்தைகளைப் பேசித் தான் உடுத்து வந்த சட்டைகளையுந் தொப்பியையும் திரிகைக்காரனிடம் உரிந்துகொடுத்து அவன் உடுத்திருந்தபழங் கந்தைச் சட்டைகளையுந் தொப்பியையுஞ் செருப்பையும் வாங்கித் தான் போட்டுப்பொல்லும் பிடித்துக்கொண்டு எப்பியவட்ட காட்டவக்கிழவனைப்போல வேடமாறி இங்குமங்குந் தள்ளம்பாறி நடந்து தன்னைச் சூழ நடந்த ஒவ்வொரு காரியத்தையுங் கவனமாய்க் கண்டார். இது வழக்கை விளங்க இருக்கிற இராசாவும் மற்றும் உத்தியோகஸ்தரும் வந்து தலத்திற் கூடினவுடனே திரிகைக்காரனுடைய வேடம் அணிந்த சிறீ மத்தேயு கேல் என்பவர் வழக்காளி இன்னானென்று மட்டிட்டுக்கொண்டு அவனண்டை சென்று சினேகிதனே, "இன்றைக்குன் வழக்கின் அடுக்கெப்படிப் போகும்" என்று கேட்க, அவனுத்தரமாக ஐயா, எனது காரியம் பார்க்கிற மாகிரிக்கு மோசமாய்த்தான் இருக்குது. நான் தோற்றுப்போனேனேயாகில் என்பாடெல்லாம் இமமட்டோடே நின்றுபோம் என்றான். திரும்பவும் திரிகைக்காரன் (சிறீ மத்தேயு கேல்) சொன்னது சினேகிதனே, "நான் சொல்லும் புத்திகளைக் கேட்பாயா? ஒருவேளை நீ ஒருக்காலும் அறியாத ஒரு காரியத்தை உனக்கு இரகசியமாய்ச் சொல்லுகிறேன். அதாவது, ஒவ்வொரு இங்கிலீசுகாரனும் யூரிமார் என்று சொல்லப்பட்ட நீதிநடுவர் பன்னிருவரிலும் தனக்குப் பிரியமில்லாதவனை மனம் போல தள்ளி வேறொருவனை அந்த இடத்துக்கு வைத்துக்கொள்ளலாம். அப்படித் தள்ளுவதற்கு நியாயஞ் சொல்லத் தேவை இல்லை. கூடுமானால் அங்கே பார். அந்த யூரியைத் தள்ளிப்போட்டு என்னை அந்த இடத்திலே வை. என்னாற் கூடியளவு தெண்டிப்பேன் என்றா"

எழுத்துக்காரிய கத்தனாகிய சக்கிடுத்தார் எழும்பி யூரிமார் பேரைக் கூப்பிட்டவரவர் ஆசனத்திருத்தினவுடனே வழக்காளியானவன் ஒரு யூரியின் பேரைச் சொல்லி எனக்கு அந்த யூரி தேவை இல்லை என்றான். அப்பொழுது பரிதானம் மிகுதியாய் வாங்கிக்கொண்டு வழக்குத் தீர்க்க வந்திருந்த இராசா வழக்காளியைப் பார்த்து அழலெழக் கோபங்கொண்டு "இதென்ன! அந்தத் துரையை யூரியைவிட்டேன் தள்ளவேண்டியதெனக்கேட்க," வழக்காளியானவன் "ஆண்டவனே, நான் ஒரு இங்கிலீசுக்காரன், ஆனபடியால் நியாயஞ் சொல்லாமல் நினைத்த யூரிமாரைத் தள்ளிப்போட எனக்கு உரித்துண்டு" என்றான். அப்பொழுது கைக்கூலி வாங்கின இராசா மற்ற யூரிமாரின் தொகை மிகுதி என்றும், அவர்கள் தான் கைக்கூலி வாங்கினவன் நயத்துக்குத் தீர்வை முடிப்பார்கள் என்றும் எண்ணி வழக்காளியைப் பார்த்து, "நல்லது உன் கேள்விப்படி அந்த யூரியைத் தள்ள நான் இடங்கொடுக்கிறேன். அவருக்காக நீ ஆரை யூரியாக வைக்க விரும்புகிறாய்" என்று கேட்டதற்கு, அந்த வழக்காளி சற்றே மனதில் ஆலோசனைபண்ணி, "ஆண்டவனே இங்கே ஒரு திரிகைக்காரன் (சிறீ மத்தேயு கேல்) நிற்கிறான் உமக்குச் சித்தமானால் அவனை யூரியாக வையும்" என்றான். உடனே திரிகைக்காரனை யூரியாக எடுத்துக்கொண்டார்கள்.

சக்கிடுத்தார் சகல யூரிமாரிடத்திலுஞ் சத்தியவாக்குமூலங்கேட்டொழிந்தவுடனே, கைக்கிமிட்டில் வல்லபனாகிய ஓர் சிறு பையன் ஒருவரும் அறியாவண்ணம் வந்து, பதினொரு யூரிமாருக்கும் பேருக்குப் பத்துப் பத்துப் பவுனும், திரிகைக்காரனுக்கு மாத்திரம் அஞ்சு பவுண் பரிதானங் கொடுத்ததைத் திரிகைக்கார யூரி நன்றாய்க் கவனமாய்க் கண்டு தன்னுடன் அடுக்க இருந்த யூரி ஒருவனிடத்தில் மெத்த மெதுவாய் "உமக்கு எத்தனை பவுண்கைக்கூலி கிடைத்தது" என்றான். அதற்கவன் "பத்துப் பவுண்" என்றான். ஆனாலும் இவர் தனக்குக் கிடைத்ததைத்தான் ஒருவருக்கும் வெளிவிடாமல் வைத்துக்கொண்டார். அதற்குப் பிறகு வழக்காளியுடைய நியாயதுரந்தரன் வழக்கைத் தொடங்கிக் காட்டக்கூடிய சகல ஒப்பனைகளையும் எடுத்துக் காட்டினான். ஆனாலும் வழக்காளியுடைய தம்பி எதிரியோவென்றாற் சகல சாட்சிக்காரருக்கும், சகல நியாயதுரந்தரனுக்கும், நீதியதிபதிக்கும் மிகுதியாய்க் கைக்கூலி கொடுத்திருந்ததினாற் சகல சாட்சிக்காரருமசத்தியம் பண்ணி இந்த எதிரியுடைய மூத்த சகோதரன் காலஞ்சென்றவேளையில்த் தாங்களும் அந்த ஊரிலேதானே இருந்தார்களென்றும், அவன் அடக்கம்பண்ணப்பட்டதைத் தாங்கள் கண்ணாரக் கண்டார்களென்றுஞ் சத்தியவாக்குமூலமாய்ச்சொன்னதினாற் சொல்லப்பட்ட சாட்சிகளுங் காட்டப்பட்ட ஒப்பனை உறுதிகளுந் தம்பிக்கு நயமாகவுந் தமையனுக்கு நஷ்டமாகவும் இருந்தன.

சகலசாட்சிகளனைத்தும் விளங்கி முடிந்ததின்பின்னால் சிங்காசனத்திலிருந்த இராசா வெகு ஆலோசனையாய் இருந்தவர்போலப் பயபத்தியுடன் சகல ஒப்பனைகளையும் எடுத்துத் தொகுத்து வகுத்து எதிர்பாட்டுக்கு நயம்பெறப்பேசி, யூரிமாரைப்பார்த்து யூரிமாரே, நீங்கள் ஒருமிக்க யோசனைபண்ணி நியாயமான தீர்ப்பைச் சொல்லுங்கள்" என்றார். யூரிமாரெல்லாரும் ஆலோசனைபண்ணிக்கொண்டு வந்ததின்பின்னால், அதிபதியானவர் யூரிமாரைப்பார்த்து, "யூரிமாரே, உங்களாலோசனையில் ஒருமனப்பட்டீர்களோ?" என்றதற்கு "ஆம், ஒருமனப்பட்டோம்" என்றார்கள். அப்பொழுது திரிகைக்காரன் (சிறிமத்தேயுகேல்) "ஆண்டவனே நாங்கள் ஒருமனப்படவில்லை" என்றான். அப்பொழுது அதிபதி ஏன் இன்னமும் ஒருமனப்படவில்லை? ஏதுகாரியம்? இணங்காது போக நியாயமென்ன? என்று திரிகைக்காரனை உறுக்கிக் கேட்டபோது அவன் சொன்னான் "ஆண்டவனே அனேக நியாயங்களுண்டு இங்கேபாரும் இந்த யூரிமார் பதினொருபேருக்கும் ஆளுக்குப் பத்துப்பத்துப் பவுண் பரிதானங் கிடைத்தது. எனக்குமாத்திரமைந்துபவுண் கிடைத்தது. இதுதானோ நீதி. இந்த நியாயந்தவிர வேறுமுண்டு. இந்த எதிரிக்கு நயமாக நின்றும்பகின நியாயதுரந்தரர் கொடுத்த நியாயங்கள் கள்ளமாயும் சாட்சிக்காரர் சொன்னது ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்டதாயும் இருக்கின்றது. இதுகாரியத்தைப்பற்றித் திரிகைக்காரன் மிகுந்த கூரிய ஆழிய கருத்துடன் வெகு வெகு நியாயப்பிரமாணங்களைக் காட்டி அவரவர் விடுத்த கள்ள நியாயங்களைத் திக்காரம்பண்ணின சூட்சாதிசூட்சத்தைக் கண்டு இராசாவும் மற்றுஞ் சகலருந் திகைத்து, இராசா திரிகைக்காரனைப் பார்த்து, "நீ எவ்விடத்தான்? நீ ஆர்? என்றார்." அதற்குத் திரிகைக்காரன் "நானோ உவேஸ்மின்னிஸ்றறா (Westminister) என்ற ஊரில் இருந்து வந்தநான், எனது பேர் மத்தேயு கேல. நானோ இங்கிலாந்து தேசமனைத்திற்கும் முதல் நீதியதிபதி. இன்றைக்கு நீ செய்த அக்கிரமத்தை நானே கவனித்தேன். நீ இப்போதானே நியாயாசனத்தை விட்டிறங்கிக் கீழே வா. நீ அதில் இருக்கிறதற்குப் பாத்திரனல்ல. நான் இப்போ நீ இருக்கிற ஆசனத்தில் இருந்து நீ தீர்த்த வழக்கை விசாரணைபண்ணுவேன்." என்றிப்படியே சகலரும் நடுங்கச் சிறீ லாட் மத்தேயுகேல் நீதியதிபதி தான் உடுத்திருந்த உடுப்போடே ஏறி வழக்கை விளங்கிச் சாட்சிக்காரருடைய மாறுபாட்டைக் கண்டு வழக்காளியாகிய மூத்த சகோதரனுக்கே ஆஸ்தி போகும்மதியெனத் தீர்த்தார். சகலரும் இதைக்கண்டஞ்சி ஏங்கினார்கள்.

---

## ஓர் பிராது.

Translation of an Article "A Case in Law" on page 56.

மாட்டின் ஆதரிடத்திலோர் பிராதுகாரியமறிவிக்கப்பட்டது. எப்படியெனில், மாவரைத்துச் சீவனம்பண்ணும் ஓர் திரிகைக்காரனிடத்தில் ஒரு கழுதை நின்றது. அது ஒருநாட் பட்டியை விட்டோடி ஆற்றில்நின்ற வள்ளத்திலே தொற்றியேறித் தண்ணீர் குடிக்கும்வேளையில் அந்த வள்ளம் பொறுப்பாய்க் கல்லுப்போட்டிராதபடியால் வள்ளமுங் கழுதையுங் கடலிற்றண்ணீருக்கு வாருப்பட்டுப்போனதால் வள்ளக்காரன் வள்ளத்தையும் திரிகைக்காரன் கழுதையையும் இளக்க ஏதுவாயிற்று.

இப்படி இரண்டுஞ் சேதப்பட்டதினால் திரிகைக்காரன் வள்ளக்காரனை நோக்கி நீ செம்மையாய்க் கல்லுப்போடாதபடியால் இப்படியானதென்றான். வள்ளக்காரன் திரிகைக்காரனைப் பார்த்து நீ உன் கழுதையைப் பட்டியிற் கெட்டியாய்க் கட்டிவையாததினால் இப்படியானதென்று முறையிட்டான். பின்னை இந்த வழக்கை எவ்விதமாய்த் தீர்க்கவேண்டுமென்றது கேள்வி. கழுதை தான் வள்ளத்தை வாரிக்கொண்டுபோனதோ? அல்லது வள்ளந்தான் கழுதையை வாரிக்கொண்டுபோனதோ? இக்கேள்வியை ஆதரிடம்

வினவினபோது அவர் சொன்னது, வள்ளக்காரன் வள்ளத்துக்குச் செவ்வையாய்க்கல்லுப்போடாததினாலும், திரிகைக்காரன் கழுதையை அறுக்கையாய்க் கட்டிவையாததினாலும் இவர்கள் இருவரும் நட்டத்தையடையவேண்டும். இரண்டுபேருந் தப்பிலிகளானபடியாலும் இதொரு குசமசக்கான காரியமாயிருக்கிறபடியாலும் அவரவர் அடைந்த நட்டம் அவரவருக்கேயல்லாமல் நியாயப்பிரமாணம் இதைப்பற்றி ஒரு நன்மையுஞ் செய்யமாட்டாது.

உதயதாரகை—MORNING STAR.

Jaffna, March 28th, 1844.

## DORMANT RESOURCES OF CEYLON.

We have heard from two Gentlemen of considerable planting experience in the interior who have lately made a tour from Kandy to Manaar, via Anarajapoora. The soil in most parts of the country, especially for some extent around that ancient capital, is described as very superior in kind, being moreover generally well watered, and possessing excellent means of drainage, both as regards surface and watercourses. The jungle and grasses are luxuriant—the latter particularly so for pasturage. In many parts there is clay of an apparantly superior sort for making tiles and bricks. Limestone ceased on the Kandy side of Dambool, between which latter place and Matelle the sub-formation was almost exclusively limestone of a fine quality and often rising in sheets and broken ridges above the surface. Here the soil was principally a brown and sometimes a black loam—friable, sandy and free. Farther down it was more variable in its nature, being in many places a clayey grit and rather stiff. Now and then exceptions appeared in the shallow covering of extensive sheets of dark *granite* or *gniess* which appeared to be the base after leaving Dambool—and also in hard, sandy barren patches which sometimes occurred for a mile or so in extent, and looked as if it was a soil being made of the decaying surface of the harder stone. With these exceptions no soil or country could be better adapted naturally for the cultivation of sugar, and other tropical products requiring principally heat and moisture acting on a good soil.

The sickliness, however, of the climate is not perhaps exaggerated when described as great, and very possibly arises in a great measure from the swamps and backwaters caused by the bad state of repair in which the many tanks and water-courses are. Much of the rain during the monsoons lies where it falls until evaporated by the succeeding dry weather. The vapour thus generated must be malarious, rising as it does from water which is of all colours from the decomposing vegetation. The air of the drier parts was pure and felt healthful.

The natives moreover attribute the sickliness of the country to the same cause. When densely populated many hundreds years ago, when Anaradjapoora city covered a square the side of which was sixteen miles in length, it was healthy. Is it not worthy the attention of Government to improve the drainage and repair the tanks? Is it not their duty, seeing that it is a country calculated to sustain a dense population and supply food to the whole Island? This was, we all know, a favorite scheme of Stewart Mackenzie, the best governor for the times Ceylon could have, who looked upon the Anaradjapoora and Newerakalawa districts as the granary of the Island; and who was only prevented from giving effect to his plans by want of surplus funds.

Scarcely less important, while more pressingly required, and better suited to the state of the Treasury and demands of the planters, is the opening up of the road from Anaradjapoora to Dambool. Widening it to some thirty feet by merely cutting the jungle on each side of the present line would answer until a better trace and road were made. This is not, as many may conceive, a matter of inconsiderable import. This route has not until very recently, been much frequented, and hence the obscurity of its claims. In the face of every practical disadvantage it is being preferred for every traffic with the interior to its rival the Putlam road, over which it possesses so many natural advantages. Upwards of five hundred bullocks were met carrying rice from Manaar to Kandy; which the Moormen could afford to sell at 4s. 6d. per bushel, getting their profit out of it after being sixteen days on the way. About the same number of sheep were met passing upwards.

The swamps and backwaters were almost insurmountable obstacles to the passage of these and the loaded bullocks. One Tavalum of Coast cattle were passed on the road with Salt fish for Kandy—and others were seen newly come in at Manaar. Coolies literally filled the road in many places as thickly as in the bazaar streets of Kandy on a Sunday after pay-day. Between Anaradjapoora and Aripo, a distance of 45 miles, during a space of 24 hours no less than *eighteen hundred ninety two* were counted—new men, principally fresh from the Coast, seeking work on the Coffee plantations. On both sides of the ferry at Manaar the numbers waiting their passage gave the scene the appearance of a fair. So many laborers coming into the country must be very gratifying, and we trust that the Planters will not forget in their thankfulness the duty and responsibility of providing for them should more immigrate than can procure work. At the same time, we would remind the rice merchants, and Nahtoocottiahs that *one day* has given an *increased* demand in the interior for eighteen hundred and ninety-two bushels of rice per month.

With so fine a country as we have been describing, and with so many facilities to improvement, we hope that Government will not be idle, nor insensible to the vast importance which will follow to the Colony on the successful settlement of men of capital engaged in the developement of resources so rich and fruitful as those possessed by Anoradjapoora.—*Col. Obs.*

*Obituary.*—Died on Tuesday evening, the 19th inst. at his house at Cotta, the Rev. Joseph Baily, *Senior Missionary, Chairman and Secretary* of the Ceylon Church Mission. Mr. Baily first left England for Ceylon in the year 1821;—only three years after the formation of the Church Mission in this island; since which time he has been actively and usefully employed in promoting to the best of his power, the evangelization of the natives of this country, by numbers of whom, as well as by his European acquaintance he was much loved and respected. His loss will be deeply felt in this Mision, in the conduct of which, his long experience and sound judgment were most valuable. His death is deeply lamented by his fellow laborers in this blessed cause, who have thus been deprived of a faithful friend and counsellor, while greatest of all must be the affliction of his bereaved family who have lost a most affectionate husband and father. Both have, however the consolation of knowing that *their* loss is *his* gain, and that he died the death of a Christian because he had lived a Christian's life.—*Observer March* 21, 1844.

## RATIONALITY OF THE CHRISTIAN RELIGION.

Supreme love to God is the sum and comprehension of all that religion, which he has enjoined upon men. And if He be a Being of supreme moral excellence, then he is worthy of the supreme affection of all his reasonable creatures. It is neither superstition nor enthusiasm, to love, to fear, to obey, to worship, and to adore, the greatest and best of beings. Rational creatures cannot give a brighter display of their rationality, than in discerning the supreme excellencies of their Creator, nor a brighter display of their goodness, than in giving Him the supreme affection of their hearts. If it be reasonable to love any object, it is reasonable to love the most amiable object. If it be reasonable to esteem any object, it is reasonable to esteem that which has the greatest natural and moral excellence. If it is reasonable to obey any being, it is reasonable to obey Him, whose will is perfect rectitude. If it be reasonable to submit to the government of any being, it is reasonable to submit to the government of Him, who always knows and always does what is best. If it be reasonable to worship any being, it is reasonable to worship Him, who is infinitely the greatest and best of all beings. The religion which God requires is founded in the nature of things and must remain a reasonable service on the part of man, as long as he retains his rational nature, and God possesses supreme natural and moral excellence.—*Emmons.*

The Government has issued a proclamation directing that the District Court of Manaar shall be held at Anaradjapoora from the 15th of the present month untill the 16th of May.

*A thousand pounds lost and found.*—A packet containing bills drawn by the governor of Ceylon on H. M. Treasury to the amount of £1000 was lost, not long ago between Nuerealia and Colombo. It was afterwards ascertained that the packet was accidently dropped on the ground by the Tappaal runner, and picked up by a poor woman from whom it was recovered without injury to the papers.

*Four and a half pence each for dog's heads.*—Government by proclamation has ordered that all dogs running loose in the town and two gravets of Jaffna between the 23d inst. and 2d prox. may be killed and a reward of four and a half pence each will be given for their heads.

We are happy to learn that the sentence passed in the Jaffna District Court last July in relation to the obscene carvings on the car of the Suthoomaly temple was affirmed by the Supreme Court at its last session in Jaffna. It is to be hoped the inferior Courts will feel encouraged from this to suppress all acts of the kind brought to their notice; and that the natives will be deterred from adding such attractions to their senseless ceremonies.

*Sale of Crown Lands.*—In 1834, there were sold of crown lands in this island 337 acres; in 1835, 434 acres; in 1836, 3,919 acres; in 1837, 3,661 acres; in 1838, 10,401 acres; in 1839, 9,570 acres; in 1840, 42,851 acres; in 1841, 78,685 acres; in 1842, 48,533 acres; in 1843, 58,336 acres. Total number of acres sold in 10 years, 246,727 acres.

*Lotteries.*——The Supreme Court of Calcutta has decided in the case of Gen. Fast *versus* Messrs. Methold and Co. that the Lottery projectors were bound to pay the prizes they were said to have drawn. Messrs. Methold have in consequence absconded.

*Progress in the right quarter.*—The more enlightened natives of Calcutta are getting up a Memorial to the deputy governor praying him to prevent the revolting exhibitions which are usually made in the public streets during the Churruk Poojah festival.

*Capture of an Outlaw.*—Mudkoorsah, the son of the Thakoor of Narhut, the notorious outlaw, who was the chief abettor of the Sagor insurrection in 1842, has just been captured. He once butchered in cool blood six out of seven horsemen and made an attack on the party sent to secure the murderers, by which Capt. Ralfe was killed.

The fifty-one cannon captured at the battle of Maharajapore, are to be sent to Calcutta, to be turned into stars, which are to be distributed as Honorary Medals among the soldiers engaged in the attack.

The young Rajah Duleep Singh was installed into office as chief of the Lahore government on the 3d of February. The ladies of the palace considering the circumstances inauspicious for his safety set up loud lamentations. At the same time Heera Singh was appointed Prime Minister. Orders are said to have been issued that every house should be illuminated on the occasion, on penalty of the owner having his face blackened, and being drummed out of town riding backwards on an ass.

*Gualior.*—The young Maharajah of Gualior who has recently, by British power been reinstated in the government of Gualior as its nominal chief, has since been married, on which occasion, 100,000 Rupees were distributed among the brahmins.

*Singular Revenge.*—At Secunderabad, a mussulman having a case in Court, threatened the Judge a Mohamedan, if it was not decided in his favor he would commit suicide; when according to the superstitious notions of the Hindus, the guilt of his death would rest upon the judge. The judge undeterred by this threat, passed sentence in favor of the opposite party. The next morning, the man was found in the place where the court had assembled bathed in his own blood, having come there in the night and cut his own throat.

*Reported safety of Capt. Conolly and Colonel Stoddart.*—The Agra Ukbar states on the authority of a correspondent at Lahore, that Dost Mahomed had sent intelligence to Colonel Richmond that both Colonel Stoddart and Capt. Conolly, who have been reported to have been beheaded by the Khan of Bokhara, are alive.

## OVERLAND INTELLIGENCE.

The *Seaforth* arrived at Colombo on the 21st inst. bringing the Overland Mail of Feb. 6. She left Bombay on the 14th. The Jaffna packets were received on the 23d inst. We give below a few extracts of the intelligence received.

Parliament was opened on the 1st of February by the queen in person. "With the usual assurance of friendly relations with foreign powers, the speech notices the China treaty, and then refers to the annexation of Scinde; acknowledging the constancy and valour of our troops, both native and European, and the skill and gallantry of their distinguished commander. Having referred to the estimates in prescribed terms, it expresses congratulation at the improved condition of trade, and passes on to notice the necessity of a revision of the charter of the bank of England. With respect to Ireland, it renews the expression of her Majesty's determination to preserve inviolate the legislative union, stating, at the same time, an earnest desire for the adoption of such measures as may tend to develope the natural resources and improve the social condition of that country." It is expected that a message will shortly be presented to Parliament making known the embarrassed state of her Majesty's pecuniary affairs.

The trial of Mr. O'Connell and his Colleagues had commenced, and more than any thing else engrossed public attention. The Attorney General occupied twelve or thirteen hours in opening the case. "The defence was opened by Mr. Shiel on the part of Mr. John O'Connell who delivered one of the most splendid addresses ever heard at the Irish bar." The Attorney General having taken offence at something spoken by one of the persons engaged for the defence took occasion during a short adjournment of the Court to send him a challenge, for which he was afterwards reprimanded by the Court. It was thought he would resign.

His royal highness, the reigning Duke of Saxe Coburg and Gotha, father of Prince Albert had died quite unexpectedly.

# புதினசங்கதி.

### யாழ்ப்பாணம்.

நாயடிக்க உத்தரம்.—அதியுத்தம தத்துவ மகத்துவம்பொருந்திய தேசாதிபதியவர்கள் கட்டளைப்படி, யாழ்ப்பாணம் சீதாரிக்கும் இரண்டு கடவத்தைக்கும் இடையே திரிகிற நாய்களை இந்த மாதம், ௨௫. திகதி தொடுத்து வருகிற மாதம், ௨. திகதிக்குள்ளாக அடித்துக்கொல்லுகிறவர்களுக்கு ஒவ்வொரு நாய்க்கு, ௪ இ. பென்ஸ் வீதமாகக் கொடுக்கப்படும்.

### இலங்கையின் சேல்வம்.

ஆசியாக்கண்டத்துள் அடங்கிய பற்பல நாடு நகரங்கள் தீவுகள் அனைத்திலும்இலங்கைத் தீவானது அதிகம் நல்வளம்பொருந்தியதென்பதற்கு மனச்சாட்சி போதுமே அல்லாமல் மறு சாட்சிதேவை இல்லை. அதற்கு உதாரணமாகக், கண்டியில் இருந்து அநுராதபுரம் வழியாக மன்னாருக்கு ஒருவன் வருவதுண்டானால் அவன் பற்பல செழிப்பான நாடு நகரங்களையும் நிலங்களையுந் தண்ணீர் போக மதகுகளையும் பற்பல வாய்க்கால்களையும் ஆடுமாடு மேயப் புற்களையும் வீடுவேய ஓடுகளும் மதிற்கட்டச் செங்கற்களுஞ் செய்து சுடத்தக்கதான களி மண்ணையும் காண்பான். இனிக் கண்டி, காளாவி, நுவரை, அநுராதபுரம் மன்னார் முதலிய தலங்கள் அசௌக்கியமானவைகளாய் இருக்கிறதற்குக் காரணம்யாதெனில், அவ்வவ்விடங்களில் வெட்டப்பட்டிருக்கிற ஏரிகளையும், ஆறுகளையும், குளங்களையுஞ் சீர்திருத்தம்பண்ணாத காரணத்தினாலும், கோடையிலே பெய்கிற மழையானது சீக்கிரம் வற்றுமல் நின்று மாரிகாலமளவும் அவ்விடத்திலுள்ள செடிகள், பற்றைகள், இலைகள், குழைகள்முதலான பதார்த்தங்களை அழுகி நாறச் செய்கின்றமையால் அவைகள்சரீரத்துக்கு அயோக்கியமானவைகளாய் இருப்பதினால் மனிதர்க்குப்பற்பலவகையான பிணிகள் இடர்கள் முதலானவைகள் உண்டாகுதற்கு ஏதுவாகுதே அன்றி மற்றப்படி அல்ல. இப்படிப்பட்ட தண்ணீர்கள் எங்கே சீக்கிரம்வற்றிப்போகுதோ அங்கங்கெல்லாம் மனிதருக்குச் சுகமாவே இருக்கும். முற் காலத்தின் நிலைமையைப் பார்த்தால், அநுராதபுரம் மெத்த யோக்கியமுள்ள தேசமாய் இருந்ததென்று காணப்படுகுது. தண்ணீரோரிடத்திற் கட்டப்பட்டுத் தரித்து நில்லாமல் ஓடிச் சீக்கிரம வற்றிப்போக மதகுகளைக் கட்டி வாய்க்கால்களை வெட்டி ஏரி, குளம், வாவி முதலியவைகளைச் சீர்திருத்திக் கட்டுவிப்பது கோவரணமேந்தாருடைய கடைமை அல்லவோ? கொஞ்சமாதத்திற்குமுன் சீர்மையிற் காலஞ் சென்றுபோன இலங்கையின் அதியுத்தம தேசாதிபதியவர்கள் இவ்விடம் இருந்த காலையில், அநுராதபுரத்தையும் நுவரை காளாவி முதலிய தலங்களையுஞ் சீர்திருத்த முயன்றிருந்தும் அவர் சீக்கிரம் இலங்கையை விட்டுப் போக ஏதுவாய் வந்தமையாலும்போதுமான பணம் இல்லாதுபோனதாலும் அவருடைய நன் முயற்சியை நிறைவேற்ற வழியில்லாமற்போயிற்று. அவர் இந்த இலங்கைத் தீவை ஒரு பெரிய பண்டகசாலையென்றெண்ணி வந்தார். இப்பொழுது இலங்கைத் தீவில் அனேகமாயிரந் துரைமார் வருகிறபடியினாலும், பணவிருத்தி அதிகப்படுகிறபடியினாலும், அநுராதபுரந் தொடுத்துத் தம்புலமட்டுக்கும் நன்கிதான தெருக்கள் போடவேண்டியது. மன்னார் தொடுத்துக்கண்டியளவும் பார்த்தால்,௫௱. எருதுக்கள் அரிசிப்போதியுஞ் சுமந்து போய்ச்சோனகர் ஒரு வுசல் மூன்றிறைசாலுக்குவிற்று ஆதாயம் அதிகமாய் எடுக்கக்காண்பீர்கள். அநுராதபுரத்துக்கும் அரிப்புவுக்கும் இடையே, ௪௫. மயில் தூரத்தில் இந்துதேயத்தில் இருந்து கூலிக்குப் பிழைக்கவந்த கூலிக்காரரை மிகுதியாய்க்காண்பீர்கள். ஒரு நாள் இருபத்துநாலு மணித்தியாலத்துக்குள்ளேஇக் கூலிக்காரரில், ௲௮௱௨௨. பேர்சந்தைக்குப்போகவுங் காண்பீர்கள். வடக்கே இருந்து வந்த அனேகங் கூலிக்காரர் கண்டிக்குப் போகும்படி மன்னார்த்துறையில்எப்போபோவோம் எப்போ போவோம் என்று வழிபார்த்திருக்கிறார்கள்.

### மதுரை.

இந்த மாதம், ௮. திகதி மதுரை மிசியோனைச் சார்ந்த பிருஞ்சிஸ் ஐசுபரி (Francis Asbury) என்று பேர்கொண்ட பிரசங்கியாருக்கு வாலசிறீகமல பூரண புண்ணிய புத்திரன் பூமியிற் பிரசன்னமானனென்ற செய்தியைக் கேட்டளவிறந்தஅகக்களிப்படைந்தோம்.

### சேன்னபட்டினம்.

உத்தியோகம் மாறிப் "பென்சன்" சலார்வாங்கிவந்த தெலிங்கு சிப்பாசியும் வேறும் ஒரு பிள்ளையாண்டானும் ஞானஸ்நானம் பெற்றதனால் அவர்களுக்கு வந்த துன்பமும் நெருக்கிடையுங் கொஞ்சமல்ல. அப்படிவந்தும் அவர்கள் சகலத்தையும் பொறுத்து உறுதியாய்ச் சகித்துவந்தார்கள். இவர்களிருவரும் குருமாருடன் மேசையிவிருந்து சாப்பிட்டுச் சகலருமறியச் சாதிபேதத்தைத் தள்ளிப்போட்டார்கள். இவர்கள் ஞானஸ்நானம் பெற்றபோது அனேகமாயிரம் ஊர்ப்பிறந்த மனிதர் அதைக்கண்டு சந்தோஷப்பட்டார்கள்.

### றேமான் கத்தோலிக்கஅன்னியோன்னிய ஐக்கியம்!

கொழும்பிலும் வெம்பாயிலும் இருக்கப்பட்டபற்பல வகையான கத்தோலிக்கச் சுவாமிமாரும் விஸ்புமாரும் தங்களுக்கே கத்தோலிக்க மதானுசாரவரசாட்சி உரித்தென்றுவாதாடுகிறபடியால் அவர்களுடைய மந்தையாகிய சபையாரில் யாதொரு மனப்பற்றுவையாதிருப்பதால் அவர்கள் அரைக் கரைவாசிபயித்தியங்கொண்டவர்கள் போல இருகிறார்களென்று வெம்பாய் "Times" என்ற பத்திரிகை வழியாய்த் தெரியவந்தது.

### துவாலியா—மறுடிடிய தேசம்.

குவாலியாவை ஆளும்படி இச்செலவு இங்கிலீசுகாரர் சிங்காசனத்திருத்திய குவாலிய மகாராசா விவாக சம்பந்தம் பண்ணின வேளையில், ௰௲. ரூபாய் பிராமணுக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டன. உச்சவதினம் பூசை முதலிய தினங்களில்த் தெருக்களிலே வெகு வெகு சச்சரவுகளும் தொந்தரைகளும் நடந்து வருகிறபடியால அவைகளைத் தடுக்கும்படி கற்குத்தாவிற் போதிய சனங்கள் ஒரு மன்றாட்டுக் கடதாசி எழுதிக் கோவரண தேசாதிபதியவர்களுக்குக் கொடுக்கும்படி முயற்சிபண்ணுகிறார்கள்.

### சீக்கந்தார்பாத்து.

சீக்கந்தார்பாத்தென்னும் ஊரிலே ஒரு துலுக்கன் தான் சபதம்பண்ணிக்கொண்டபடி தன்னைத்தானே கொன்றுபோட்டான். அதெப்படியெனில், அவன் தன் ஊரிலே உள்ள நியாயாதிபதிக்கு முன்னிதாகச் சிறிது காலத்துக்கு முன் ஒரு வழக்குப் பேசிக்கொண்டுவந்தான், இப்படி அவன் வழக்கை நடத்தி வருகையிலே அவன் சொன்னதாவது, இந்த வழக்கை நீதித்துரையானவன் என் பட்சமாய்த் தீராதிருப்பானேயாகில், உடனே தீர்ப்புவாசித்த பின் அந்த நீதித்துரைக்கு முன்னாகவே இறந்துவிடுவேனென்று சபதம்பண்ணி இருந்தான். இப்படியிருக்க, நீதித் துரையோவெனில் வழக்கை விளங்கிச் சரியாய் ஆராய்வு செய்தபின்பு இம் மனிதனுடைய சபதத்தினால் அஞ்சித் தாமதியாமல் இவனுக்கு விரோதமாகத்தானே தீர்ப்புவாசித்தார். அந்த மனிதன் தீர்ப்பைக் கேட்டுக்கொண்டு பின்பொன்றும் பேசாமல் வீட்டுக்குப்போய் அன்று இராவிலே ஒருசவரகன் கத்தியை எடுத்துக்கொண்டு கோடுகூடும் அந்த வீட்டிலே போய்க் கழுத்தை வெட்டிக்கொண்டு செத்துவிட்டான். காலையிலே கோட்டிலே போய்ப் பார்க்கும்பொழுது இம் மனிதன் இரத்தத்தினாலே தோய்ந்து நனைந்தவனாய்க் கிடந்தான்.

## THE OBSERVER.—No. 2.

### *Native Credulity—belief in Witchcraft.*

On paying a visit lately to a friend living in Manepy, he told me the whole village was in a state of excitement from the disappearance of a young man, named Arumukam, who was supposed to have been carried off by the devil. I inquired into the circumstances of the case and he related them to me as follows: Several months ago, a young woman was living with his brother, but not being happy together, they separated, and she was afterwards married to Arumukam But she was not long contented to live with him, and left him and went to her father's house. Not long afterwards, I think about twenty-five days ago, the young man began to act very strangely. When asked a question, he would answer like one devoid of reason. He rejected his common food and fed upon leaves and roots. He left his work and wandered idly about. One who saw him said, "he is bewitched." His parents were much distressed, and inquired anxiously what they could do to relieve him. They sought the advice and assistance of a Guru, saying—"Sir, our son is possessed of a devil, what shall we do to relieve him?" The Guru answered, "If you will provide me 20 dollars for the purchase of medicine, and give me 50 dollars for my reward, I will cast the devil out of your son." They answered—"We are poor, and cannot obtain so much money." The Guru replied: "You must try; I cannot help you for less."—They then went away, and in various ways tried to obtain the money; but in the mean time their son left home and did not return, and they had been since seeking him here and there without success. They inquired of every one if he had seen him. One said he saw him under a margosa tree with a handful of leaves in his hand, and looking up into the tree; and when he had turned to call a man to come and see him, and again looked at the place, he was not there. Another said he had seen him, when crossing the fields in a distant place, and he tried hard to overtake him, till on once looking away at some cows and seeking to find him he had disappeared. For many days past nothing had been seen or heard of him; and it was believed the devil had carried him off. "He was well known about here; and we feel grieved at his unfortunate case," said he.

I inquired if he believed that the young man was really possessed of a devil? "No," said he, "I think it more probable that something of a poisonous nature has been given him to eat; which has taken away his senses." "How then do you account for the story of his sudden disappearance when seen in the field and under the margosa tree?" "You know," said he, "our people in most cases believe according to their imagination: they never carefully investigate circumstances, to ascertain the truth, but will say yes or no, to any question, just as their feelings at the time prompt them to speak.—I think that the person seen under the margosa tree, was merely a boy bearing some resemblance to Arumukam, who was engaged in clipping off a few bunches of leaves from the tree, and who had passed behind the hedge, when the man looked there the second time; and as to the person seen in the field, he was probably one cutting grass; and had stooped down in a water course when he was missed"—"Did not the Guru," said I, "know that he was really possessed of a devil when he offered to deliver him for 70 dollars?" He laughed at this, saying—"I think the Guru thought it was a good opportunity for him to increase his funds, and by taking the worst view of the case he would get the most credit and cash by his job, if he succeeded; and if he did not, it would be easy for him to attribute his failure to the wrong position of the planets and thus excuse himself." "You think this Guru was a knave, then?" said I, inquiringly. "I do," said he; "what else can we think of one, who boasts of power to dispossess the devil, and will not use it unless he be paid an exorbitant price; thus distressing poor people by making them believe their friends are possessed when they are not and constraining them to pledge their property and their jewels to get money for him. And I have not a much better opinion of any of the Gurus. The cry of them all is, "Give, give, give," and when we ask a favor of them, their reply is still, "Give, give, give." Why do they not feel some interest for our welfare? Why do they not give us something more substantially good than ashes?—We cannot eat ashes; we cannot drink ashes; our children receive no benefit by ashes; I think we are fools to follow after the Gurus as we do. Their only object seems to be to have us think they are God's special favorites and worthy to receive our highest honor and our choicest gifts. They will give us in return for this nothing but ashes. Why do they not establish schools and teach our children as the missionaries do?—They will not spend a chally except for their own honor and benefit."

"Can the missionaries," said I, "cast out devils?"

"I don't know," said he, "I believe the devil does not trouble them. The Christians say they are not afraid of the devil; for he cannot hurt them without God's permission, and if they truly serve him, he will not suffer the devils to do them an injury. Our people think the devil is in every thing; and they constantly fear him. I think it would be well for us to seek and serve a God who shall be able to deliver us from these fears"

On my return home, I mentioned what I had heard to my elder brother, who has travelled about some and has learned to disbelieve in many of the superstitions of our people. He said, "I would like to be a Guru and cast out devils for 70 dollars a piece, if I could be permitted first to give the people medicine that would make them crazy. He who sends the devil can no doubt take him away again," said he. He then mentioned a circumstance which occurred some time ago while he was travelling to Colombo. "One night," he said, "I with six companions was lodging in a house, and most of us had fallen asleep, when there was a rattling on the roof and presently some koondoomanies* fell down upon us. We all started up. "It is the devil," said one. "What shall we do?" said another. I said—"Let us look out and see what it is." But they were all afraid and would not go out. I however went out and looked about carefully but could see no body. I then went in and we all lay down again. Presently the rattling returned and the koondoomanies fell thicker than before. Several of the company were now certain it was the devil—I did not believe the devil would engage in throwing koondoomanies and went out again more cautiously, when I saw a little boy on the opposite hedge plucking off the koodoomanies and throwing them on the roof. I returned and told what I had seen, and we all laughed heartily at the fears we had indulged."

---

## கண்காணி, உம். இலக்கம்.—பேய் வித்தை.

முகாமைக்காரரே,

மானிப்பாய்க் குறிச்சியிலிருக்கிற என் தோழனொருவனை நானிச்செலவு போய்க் கண்டபொழுது அவர் சொன்னது, என்ன காணும், இங்கே ஆறுமுகவனென்று பேர்கொண்ட ஒரு வாலிபனையல்லோ பேயா பிசாசோ காவிக்கொண்டெங்கேயோ போனதினால் ஊர்முழுதுங் கலகியாயிருக்குதென்க— நானும் அதின் வரலாற்றைச் சற்றே செப்புங்காணுமென, அவர் சொன்னார்— பேய்கொண்டுபோன பிள்ளையாண்டானுடைய சகோதரன் சிறிது காலத்துக்கு முன்னிதாக ஒரு சிறுமியை மணம்புரிந்திருந்தும் அவர்கள் இருவருக்கும் இணக்கமில்லாமையினாலே இருவரும் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்துபோக இவன் அவளை வதுவைபுரிந்தும் திரும்பவும் இவனுக்கும் அவளுக்கும் பொருந்தாமையால் அவள் இவனையும் விட்டுத் தன் பெற்றார்வீடு தேடி ஓடிப்போய்க் கொஞ்சக் காலத்தின் பிறகு இவன் பைத்தியக்காரனானான். இவனிடத்திலே தாகுதல் ஒரு காரியத்தைப் பற்றி வினவினால் இவன் விடுக்கும் உத்தரமெல்லாம் மாறுபட்டக் குணமாயிருந்தன. இவன் தனது வழமையான போசனத்தையும் வேலையையும் விட்டு இலை குழை முதலிய மூல பலாதிகளைப் பிடுங்கி அருந்திக்கொண்டுவந்தான். இவனைக் கண்டவர்களெல்லாரும் இவனிலே ஆரோ பேயை ஏவிவிட்டார்களென்றார்கள். இவனுடைய உற்றார் பெற்றாரனைவோரும், ஐயோ! இவனைப் பிடித்த பேயை அகற்ற வேண்டுமே யாதுசெய்வோமென்று துவித்துக்கலங்கிக்கொண்டு கூடுடைந்து கலைந்த ஈய்களைப்போலத் திரிந்து கடைசியாக ஒரு குருக்களைக்கண்டு அவரைத் தண்டனம்பண்ணி, ஐயா சாமி, எங்கள் பொடியனொருவனையல்லோ பேய்பிடித்துக்கொண்டாட்டுகுது அத்தை அகற்ற நாம யாதுசெயலைப் புரியவேண்டுமெனக் குருக்கள் சொன்னார். நீங்கள் மருந்துசெலவுக்கெனக்கு இருபது இறைசாலும், என் பிரயாசத்துக்கைம்பது இறைசாலுமாக எழுபது இறைசால் இப்போ கொடுப்பீர்களானால் நான் பேயைத் துரத்துவனென்க-அவர்கள் சொன்னது சாமி, நாங்களோ வறியவர்கள் எழுபது இறைசலுக்கு ஆரை விற்போமென்க—குருக்கள் சொன்னது போய்த் தெண்டித்துச் சேருங்கள் சேர்த்தபின் என்னிடங்கொண்டுவாருங்கள். அதற்குக் குறைய நான் பேய்துரத்தமாட்டேனென்றவர்களை அனுப்ப அவர்கள் பரத்தாலே விழுந்தவனை மாடேறிமிதித்திட்டவண்ணம் கலங்கிக்கொண்டுபோய் எழுபதிறைசால்த்தேடப் பலவழியாலுந் தெண்டிக்கச் சொல்லப்பட்ட பைத்தியகாரனும் வீட்டைத் துறந்துகாட்டில்த்திரியநாமெங்ஙனுந திரிந்து தேடிப்பாத்து விசாரித்துவருகையில், அவன்கை நிரம்ப இலைகளைப் பிடுங்கிவைத்துக்கொண்டு ஒரு வேப்பமரத்தின் கீழிருந்து மரத்தை அண்ணாந்துபார்த்தான். பிறகு நானொரு ஆளையுங் கூட்டிக்கொண்டுவந்து அவனிருந்த இடத்தைப் பார்த்தபொழுது அவனை அங்கே காணவில்லையென்றான், வேறொருவன் சொன்னான்-நான் அந்த வயல்வழியாய் வரும்பொழுது அவனைக்கண்டு அவனைப் பிடிக்கப்பார்த்தேன். என்றாற் கூடாமற்போயிற்

---

* The seed of a medicinal shrub, "abrus precatorius" found growing freely in hedges in this country.

று நான் என் ஆடுமாடுகளை மேய்த்ததின்பின் அவனைப் பிடிப்பிக்கலாமென்றெண்ணினேன் அவனெங்கேயோ மின்னுமல் முழங்காமல் இடிவிழுந்ததுபோலச் சட்டென மறைந்துவிட்டானென்றான். இந்த விசரன் வீட்டைவிட்டுப் போய் இற்றைக்கு இருபத்தைந்துநாளாயிற்று. அவனையோ பேய்காவிக்கொண்டோடிவிட்டதென்றெல்லாரும் எண்ணிக்கொண்டார்கள். இந்த விசரன் மானிப்பாய்க் குறிச்சியான், இவனை எல்லாரும் அறிவார்கள்.

காரியம் இப்படி இருக்க, நிசமாய் இந்த வாலிபனிற் சிலர் காடேறியென்னும் பசாசை ஏவிவிட்டார்களென்பதை நீராய் நம்புகிறீரோவென்றெனது தோளனிடம் வினவ—அவர் சொன்னார்—அவனிலே ஒருவரும் பேயேவிவிடவில்லை இவனுக்காரோ நஞ்சுபோட்டுவிட்டார்கள். அதினால் அவன் அறிவுகலங்கிப் போயிற்றென்றார். பின்னை, அவன் வேப்பமரத்தின் கீழும் வயல் வெளியிலுங் கண்டவுடனே கண் மூடி விழித்த அவ்வளவு சுறுக்காய் மறைந்துவிட்டானென்று ஒரு கதையுண்டே அதற்கென்ன சொல்லுகிறீரென அதற்கவர் எங்கள் சாதிப்புத்தி உமக்குத் தெரியாதா? அவர்கள் யாதொன்றையும் ஆய்ந்தோய்ந்துபாராமல் எடுத்தடிமட்டக்காய் எல்லாவற்றையுந் தங்கள் எண்ணம்போலே நம்புவது அவர்கள் சுபாவ இயல்பு. அவர்களிடத்தில் ஏதை வினவினாலும் அந்நேரத்தில் அவர்களுக்குண்டான எண்ணம்போலே ஆகாயத்தில் மாளிகை கட்டினவண்ணமாய் ஆம் அல்லது இல்லையென்பதும் அவர்கள் நிருவாகம். வேப்பமரத்தின் கீழே அந்த விசரனை ஒருவன் கண்டதாகவல்லோ ஒரு கதையுண்டு. அது நான் நினைக்கிறமட்டுக்கு, அவன் சாயல் நிறம் வடிவுள்ள ஒரு பொடியன் வேப்பமரத்திலேறி ஆடுமாடுகளுக்கிலைகுழைவெட்டிக்கொண்டிருந்ததாகவும், வயல்வெளியிற்கண்டவன் அது வயலிலே புல்லுச் செதுக்கிக்கொண்டிருந்தவனை அவனென நினைத்து மாறிச் சொல்லுகிறதாகவும் நினைக்கிறேனென்றார். அப்போ நான் கேட்டது—என்னகாணுந் தோளனே-எழுபதிறைசால் தரச்சொல்லிக்கேட்டாரே ஒரு குருக்கள் அவருக்கிவனிலே யாரோ பேயை ஏவிவிட்டார்களென்று தெரியாதா என்றதற்கு, அவர் போங்காணும் போம் உமக்குத் தெரியாது இடங்கண்டால் விடுவனோ யாழ்ப்பாணத்தான் என்ற கணக்காய்க் குருக்களும் இதுதான் சமயமென்றெண்ணிப் பணம்பறிக்க வ பார்க்கிறார். அவர் அவனிற் பிடித்தபசாசையோட்டச் சக்தியில்லாதுபோனாற் சொல்லுவார். நானென்னசெய்வேன். கிரகநோக்கையும் அதின் நிலையையும்பார்த்தால் அது அவனுக்கல்லோமெத்தமோசத்துறையாய்த் திரும்பிநிற்குதென்று கிரகத்திற் பழிபோடுவார் அப்போ நான் சொன்னேன். பின்னை இந்தக் குருக்கள் ஒரு தந்திரிபோலே இருக்குது பேயோட்டச் சக்தியுண்டென்றுபுழுகியும்பணம் மிகுதியாய்க் கொடுத்தாலல்லாமல்த் துரத்தமாட்டேனென்று சொல்லுபவனெப்படிப்பட்டவன் அவனை நாழிகொண்டு கடல்நீரை அளக்கத்துணிந்த பேதையோடொத்தபேதையென்று சொல்லலாமேயொழிய அவன் புழுகுகிறபடி அவனிடத்திற் பேயோட்டச் சக்தியில்லையென்றுரோபிக்கவேண்டியது. இந்தப் புழுகன் இவ்விதமாய்ப் பசாசுபிடியாதவனைப் பிடித்தவனெனச்சொல்லி ஏழைகளை மிரட்டித் தன் வயிற்றுக்கொதியை அவிக்கப் பணம்பறிக்க வழிபார்க்கிறான். பார்த்துமென்ன செய்கிறான் அவர்களுடைய ஆபரணதிகளை இடுவைப்பித்துப் பணமெடுப்பித்து அத்தைத்தானே வாங்கிக்கொள்ளுகிறான். இந்துமதக்குருக்களிலெவரைப்பார்த்தாலும் கொடுங்கள் தாருங்கள் இயுங்கள் என்ற சத்தமேயல்லாமல் வேறொன்றுங் காணேம் இக் குருக்கள்மாரெங்கள் நல்வாழ்விலேன்பிரியமுற்றோர்போலக் காணேம். அவர்களெமக்குத் திருநீறிடுவதிலும் வேறு நன்மைசெய்யக்காணேம். நாங்கள் திருநீற்றைச் சாப்பிடுகிறதுமில்லைக் குடிக்கிறதுமில்லையே அத்தாலெங்கள் பிள்ளைகுட்டிகளுக்கு ஏதேனு நன்மையுமில்லையே தாங்கள் கடவுளினது வரப்பிரசாதமென்னும் அருள்பெற்றவர்களென்றெங்களை நம்பப்பண்ணி நாங்கள் தங்களுக்கு வந்தனை வழிபாடுகளைச் செய்யவேண்டுமென்று சொல்லி எம்மிடம் பணம்பிடுங்க வழியெடுக்கிறார்கள். நாங்கள் எதைக்கொடுத்தாலும் திருநீற்றையல்லாது வேறொன்றும் அவர்கள் எங்களுக்குத் தருகிறதில்லை. சத்திய வேதக் குருமார் செய்கிறதுபோல இவர்களுமென் எங்கள் பிள்ளைகள் படிக்கிறதற்குப் பள்ளிக்கூடங்களை இஸ்தாபிக்கிறதில்லை. தமது நயத்துக்காகவன்றிப் பிறர் நன்மைக்காக அவர்களொரு சின்னக்காசேனுஞ் செலவிடுகிறதில்லை. பின்னை சத்திய வேதக் குருமாரிடம் பசாசையோட்டச் சக்தியுண்டோவென்றெனது தோளனிடம் வினவ—அவர் சொன்னது அதைப்பற்றி எனக்குத் தெரியாது. அவர்களைப் பசாசு பிடிப்பதுமில்லை. கிறிஸ்தவர்கள் பசாசுக்கஞ்சுகிறதுமில்லை. கடவுளேவலாலன்றி மற்றும்படி பசாசு அவர்களை ஒன்றுஞ் செய்துகொள்ளமாட்டாது அஞ்சினவன்கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பசாசு என்றாற்போல நமது சனம் கண்ட நின்றவிடங்களிலெல்லாம் பசாசுண்டென நினைத்து நடுநடுங்குகிறார்கள் சத்தியகடவுளின் விசுவாசம் நமக்குண்டானால் இந்தப்பயமெல்லாம் பருதியைக்கண்ட பனிபோலப் பறந்துபோம்.

நான் வீட்டுக்கு வந்தவுடனே கேள்விப்பட்ட சங்கதிகளை என் தமையனுக்குரைக்க அவர் சொன்னது, நான் சனங்களைப் பயித்தியமாக்க மருந்துகொடுக்கிறதற்கு இடங் கொடுத்தார்களேயானால் ஆளொன்றுக்கு, ௭௰. இறைசால் வாங்கிக்கொண்டு பசாசைத் துரத்தி அவர்களுக்குக் குருக்களாய் இருப்பேனே-ஏனெனிற் பசாசை ஏவி விடுகிறவனுக்குச் சந்தேகமில்லாமல் அத்தைத் துரத்தவுஞ் சக்தி உண்டு ஒரு நாள் இரவில் நானும் வேறு பேரும் ஒரு வீட்டிற் படுத்திருந்தோம். எங்களிற் சிலர் கனநித்திரையாய் இருந்த வேளையிற் கூரையில் ஒரு சத்தங் கேட்டது. உடனே குன்றி மணிக்கொட்டை எங்கள் மேல் விழ, நாங்கள் திடுக்கிட்டெழும்பினோம். ஒருவன் இது பேயின் செயலென்று சொல்ல, நான் சொன்னது—நாம் எல்லாரும் எழும்பி அத்தை என்னென்று போயப் பார்ப்போம் வாருங்களென எல்லாரும் வெளியே போகப் பயப்பட்டார்கள் நான் மாத்திரம் வெளியேபோய்ப் பார்த்தபொழுது ஒருவரையுங் காணாமல்த் திரும்பவும் போய்ப் படுத்திருந்தவுடனே கூரையிலே திரும்பவுஞ் சத்தங்கேட்டது குன்றிமணியுஞ் சற்றேபாரங்கொண்டெங்கள் மேல் விழுந்தது. இருந்தவர்களெல்லாரும் இது பசாசுதானென்று நினைத்தார்கள் ஆனாலும் பசாசு குன்றிமணியாலெறியமாட்டதென்று நான் கெட்டியாய் நம்பிக்கொண்டு மறுபடியுமெழும்பிப் போய்ப் பார்த்தபொழுது அடுத்த வேலிக்குக் கிட்ட ஒருபையன் நின்றுகொண்டு குன்றிமணிக்கொட்டையைப் பிடுங்கிக் கூரையிலெறியக்கண்டு வந்தெல்லாருக்குஞ் சொன்னபொழுது அவர்களெல்லாருந் தங்கள் மதியீனத்துக்காகக் கெக்கட்டமிட்டுச் சிரித்தார்கள்.

*To the Editor of the "Morning Star."*

Dear Sir,

Having once favoured me with the insertion of a question as well as its solution, I hope you will not reject the following, although, by transcribing which to the Star I realize the saying இடங்கண்டால் விடுவனோ யாழ்ப்பாணத்தான்.

In drawing water out of a well, after the bucket or as it is in these countries, the *basket*, is filled with water it sinks to the bottom of the well or as far as the rope will suffer it; but in drawing it up through the water it seems to have little or no weight till it has ascended to the surface of the water and then the difficulty in raising it to the top of the well is increased. This subject is beyond my comprehension.

I beg therefore you will allow it a corner in your paper in the hope that it will be explained by some of your readers.

Yours very obediently,

Jaffna 17th February 1844. *Juvenis Discipulus.*

ஓர் வினா.

கனம்பொருந்திய முகாமைத் துரையே,

தாங்களென்குதல் தங்கள் தாரகையை வாசிப்பவர்களென்குதல் மத்தேயு. ௰௭. அதிகாரத்தின் கடைசி, ௪. வாக்கியங்களின் கருத்தைத் தெளிவாய் விளக்கச் சித்தமாய் இருப்பீர்களா? அது எனக்கும் புதியேற்பாட்டைத் தமிழில் வாசிக்கிற அனேகருக்குந் தெளிவாய் விளங்கவில்லையே.

A Question.

Mr. Editor: Will you, or some one of your correspondents, have the goodness to give an explanation of the last four verses of the 17th chapter of Matthew? It seems to me an obscure passage: and I venture to say, that besides myself many Tamil readers of the New Testament get no distinct impression from it.

A Reader.

## POET'S CORNER.

### THE SONG OF THE RIVER.

I SPRING from the rock, from the mountain side, sparkling pure and bright;
And I gather strength, as I rapidly glide from my birth-place into light.
Richness I bear to land and tree, beauty to hill and dale,
Beast and bird delight in me, drink and are strong and hale.

Fresh are the flowers that deck my banks, the soil is greenest there:
And the warbling wing'd ones sing their thanks, as they drink of me every where

The traveller on burning sands, the wanderer on the sea,
Gasping for water, clasp their hands, and wildly pray for me.

I am the only drink was given to man, when pure and free;
Return then to the streams of heaven, you are safe when you drink of me.

### THE JUST JUDGE.

A GENTLEMAN who possessed an estate worth about five hundred a year, in the eastern part of England, had two sons. The eldest, being of a rambling disposition, went abroad. After several years, his father died; when the younger son, destroying his will, seized upon the estate. He gave out that his elder brother was dead, and bribed false witnesses to attest the truth of it.

In the course of time, the elder brother returned; but came home in destitute circumstances. His younger brother repulsed him with scorn, and told him that he was an impostor and a cheat. He asserted that his real brother was dead long ago; and he could bring witnesses to prove it. The poor fellow, having neither money nor friends, was in a sad situation. He went round the parish making complaints, and, at last, to a lawyer, who, when he had heard the poor man's story, replied, "You have nothing to give me. If I undertake your cause and lose it, it will bring me into disgrace, as all the wealth and evidence are on your brother's side.

"However, I will undertake your cause on this condition; you shall enter into an obligation to pay me one thousand guineas, if I gain the estate for you. If I lose it, I know the consequences; and I venture with my eyes open." Accordingly, he entered an action against the younger brother, which was to be tried at the next general assizes at Chelmsford, in Essex.

The lawyer, having engaged in the cause of the young man, and being stimulated by the prospect of a thousand guineas, set his wits to work to contrive the methods to gain his end. At last, he hit upon this happy thought, that he would consult the first judge of his age, Lord Chief Justice Hale. Accordingly, he hastened up to London, and laid open the cause, and all its circumstances. The judge, who was a great lover of justice, heard the case attentively, and promised him all the assistance in his power.

The lawyer having taken leave, the judge contrived matters so as to finish all his business at the King's Bench, before the assizes began at Chelmsford. When within a short distance of the place, he dismissed his man and horses, and sought a single house. He found one occupied by a miller. After some conversation, and making himself quite agreeable, he proposed to the miller to change clothes with him. As the judge had a very good suit on, the man had no reason to object.

Accordingly, the judge shifted himself from top to toe, and put on a complete suit of the miller's best. Armed with a miller's hat, and shoes, and stick, he walked to Chelmsford, and procured good lodgings, suitable for the assizes, that should come on next day. When the trials came on he walked, like an ignorant country fellow, backwards and forwards along the country hall. He observed narrowly what passed around him; and when the court began to fill, he found out the poor fellow who was the plaintiff.

As soon as he came into the hall, the miller drew up to him. "Honest Friend," said he, "how is your cause like to go to-day?" "Why," replied the plaintiff, "my cause is in a very precarious situation, and, if I lose it, I am ruined for life." "Well, honest friend," replied the miller, "will you take my advice? I will let you into a secret, which perhaps you do not know; every Englishman has the right and privilege to except against any one juryman through the whole twelve; now do you insist upon your privilege, without giving a reason why, and, if possible, get me chosen in his room, and I will do you all the service in my power."

Accordingly, when the clerk had called over the names of the jurymen, the plaintiff excepted to one of them. The judge on the bench was highly offended with this liberty. "What do you mean," said he, "by excepting against that gentleman." "I mean, my lord, to assert my privilege as an Englishman, without giving a reason why."

The judge, who had been highly bribed, in order to conceal it by a show of candor, and having a confidence in the superiority of his party, said, "Well, sir, as you claim your privilege in one instance, I will grant it. Whom would you wish to have in the room of that man excepted?" After a short time, taken in consideration, "My lord," says he, "I wish to have an honest man chosen in;" and looking round the court—"My lord, there is that miller in the court; we will have him, if you please." Accordingly, the miller was chosen in.

As soon as the clerk of the court had given them all their oaths, a little dexterous fellow came into the apartment, and slipped ten golden guineas into the hands of eleven jurymen, and gave the miller but five. He observed, that they were all bribed as well as himself, and said to his next neighbor, in a soft whisper, "How much have you got?" "Ten pieces," said he. But he concealed what he had got himself. The cause was opened by the plaintiff's counsel; and all the scraps of evidence they could pick up were adduced in his favor.

The younger brother was provided with a great number of witnesses, and pleaders, all plentifully bribed, as well as the judge. The witnesses deposed, that they were in the self-same county when the brother died, and saw him buried. The counsellors pleaded upon this accumulated evidence; and every thing went with a full tide in favor of the younger brother. The judge summed up the evidence with great gravity and deliberation;—"and now, gentlemen of the jury," said he, "lay your heads together, and bring in your verdict as you shall deem most just."

They waited but a few minutes, before they determined in favor of the younger brother. The judge said, "Gentlemen, are you agreed, and who shall speak for you?"—"We are all agreed, my lord," replied one; "our foreman shall speak for us." "Hold, my lord," replied the miller; "we are not all agreed." "Why?" said the judge, in a very surly manner, "what's the matter with you? What reasons have you for disagreeing?"

"I have several reasons, my lord," replied the miller: "the first is, they have given to all these gentlemen of the jury ten broad pieces of gold, and to me but five; which, you know, is not fair. Besides, I have many objections to make to the false reasonings of the pleaders, and the contradictory evidence of the witnesses." Upon this, the miller began a discourse, which discovered such vast penetration of judgment, such extensive knowledge of law, and was expressed with such energetic and manly eloquence, that it astonished the judge and the whole court.

As he was going on with his powerful demonstrations, the judge, in great surprise, stopped him. "Where did you come from, and who are you?" "I came from Westminster Hall," replied the miller; "my name is Matthew Hale; I am Lord Chief Justice of the King's Bench. I have observed the iniquity of your proceedings this day; therefore, come down from a seat which you are nowise worthy to hold. You are one of the corrupt parties in this iniquitous business. I will come up this moment and try the cause all over again."

Accordingly, Sir Matthew went up, with his miller's dress and hat on, began the trial from its very commencement, and searched every circumstance of truth and falsehood. He evinced the elder brother's title to the estate, from the contradictory evidence of the witnesses, and the false reasoning of the pleaders; unravelled all the sophistry to the very bottom, and gained a complete victory in favor of truth and justice.

---

A CASE IN LAW.—A case in Law was related to Martin Luther; namely, that a miller had an ass which ran out of his paddock and came to river's side, where he went into a fisherman's boat that stood in the river, to drink thereout. But inasmuch as the boat had not been tied fast by the fisherman, it floated away with the ass, so that the miller lost his donkey, and the fisherman his boat. The miller thereupon complained of the fisherman for neglecting to tie his boat fast; and the fisherman accused the miller, for not keeping his ass at home, desiring satisfaction for his boat. Now the question was, *What is the Law?* Did the ass take the boat away, or the boat the ass? Whereupon Luther said, "These are called cases in Law: they were both in error; the fisherman in not tying his boat fast, and the miller in not keeping his ass at home. There is a fault on both sides; it is a chance-medley, there was negligence on both sides: such cases wave the rigour of lawyers; for the extreme rigour is not to be exercised, but only equity. All things are to be governed by equity."—*Luther's Familiar Discourses.*

---

*Afraid to learn.*—It is related that Galileo, who invented the telescope with which he observed the satellites of Jupiter, invited a man who was opposed to him to look through it, that he might observe Jupiter's moons. The man positively refused, saying, "If I should see them, how could I maintain my opinions which I have advanced against your philosophy?" This is the case with many. They will not look at the truth. They will not hear it, for fear that the arguments which they have framed will be destroyed, and they may be obliged to give up their vicious indulgences.

---

### சித்திரை மாதம்.

சா தி மூ. சித்திரை மூ. ௰க ந் தீ முதல் வைகாசி ௰க தீ. வரை.

| E. Date. | தமிழ்த் தேதி | வாரம். | நட்சத்திரம் | | திதி. | | யோகம் | | கரணம். | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | ௧ | வி | தி | ௫௩111 | ந | ௩௨11 | சா | ௫௰11 | தை | ௩111 |
| 12 | ௨ | வெ | அ | ௫௪11 | த | ௩௰111 | சு | ௪௯111 | வ | ௧11 |
| 13 | ௩ | ச | ச | ௫௯1 | ஏ | ௩௰1 | சு | ௪௪ | ப | 111 |
| 14 | ௪ | ஞா | பூ | ௫௧1 | து | ௩௪1 | பி | ௪௨1 | கவு | 111 |
| 15 | ௫ | தி | உ | ௯௰ | தி | ௩௩1 | மா | ௪௧11 | கர | ௨1 |
| 16 | ௬ | செ | உ | ௩11 | ச | ௩௯11 | வை | ௪௧11 | வி | ௫ |
| 17 | ௭ | பு | ரே | ௮111 | [illegible] | ௪௰111 | வி | ௪௨11 | சது | ௮111 |
| 18 | ௮ | வி | அ | ௰௪111 | பி | ௪௫11 | பி | ௪௬11 | கிம் | ௰௩1 |
| 19 | ௯ | வெ | பர | ௨௧ | து | ௫௰111 | ஆ | ௪௫ | பா | ௰௮1 |
| 20 | ௰ | ச | கா | ௨௭11 | தி | ௫௫11 | சவு | ௪௯11 | தை | ௨௬ |
| 21 | ௰௧ | ஞா | ரோ | ௫௩11 | ச | ௯௰ | சோ | ௪௭11 | வ | ௨௭111 |
| 22 | ௰௨ | தி | மி | ௩௯ | ப | ௯௰ | அ | ௪௮ | ப | ௩௧111 |
| 23 | ௰௩ | செ | தி | ௪௩1 | ப | ௩11 | சு | ௪௭11 | பா | ௩11 |
| 24 | ௰௪ | பு | பு | ௪௯11 | ஷ | ௫111 | தி | ௪௯1 | தை | ௫111 |
| 25 | ௰௫ | வி | பூ | ௪௮11 | ஸ | ௭ | சூ | ௪௪ | வ | ௭ |
| 26 | ௰௬ | வெ | ஆ | ௪௧1 | அ | ௭ | க | ௪௰111 | ப | ௭ |
| 27 | ௰௭ | ச | ம | ௪௯ | ந | ௫111 | வி | ௩௯11 | கவு | ௫111 |
| 28 | ௰௮ | ஞா | பூ | ௪௭11 | த | ௩1 | து | ௩௪11 | கர | ௩1 |
| | | | | | ஏ | ௫௯11 | | | வ | ௨௮1 |

# SUPPLEMENT TO THE
# உதயதாரகை.—MORNING STAR.

சு. புத். சஞ். கூ.] தஅ௱சசஅ௵. பங்குனி மீ. ௨அ. தேதி வியாழக்கிழமை, Thursday, March 28, 1844. [Vol. IV. No. 6.

## BRIEF SKETCH OF KANDY.

[From the *Commentator*.]

Kandy, the ancient capital of Ceylon, is situated nearly in the centre of the Island. It is 72 miles distant from Colombo, 130 from Trincomalie, 144 from Point de Galle, and 221 from Jaffna. It has been in the possession of the British 29 years. In 1815 the last king of Kandy, in consequence of the atrocities he had committed, was delivered up by his own subjects as a prisoner to the British, and the whole of the Kandyan Provinces were ceded to them. Since then very great improvements have been made in the town, as well as in the various roads branching therefrom.

The town of Kandy is situated on an elevated plain, about 1,500 feet above the sea, and enclosed by lofty mountains, rich in the production of forest timber. The residence of the Governor is called the Pavilion. It is superior in structure and appearance to any other building in the Island. Here the governor usually resides three months in the year. There are many other respectable houses, occupied by the civil and military servants of government, proprietors of coffee estates in the neighbourhood, and others.

There are several Hindu temples and Mohammedan mosques, but the Budhist temples are the most numerous. One of them, the great Malagawa, contains a relic supposed to have been a tooth of Buddhu, and on this account is venerated by the natives more than any other spot in the world. Budhism is however much declining: the large annual procession, called the Perahara, is much less splendid, and less numerously attended than formerly; Christianity is making its way among the people, and though comparatively few openly avow themselves Christians, and exhibit sufficient proofs of the genuineness of their conversion to be received into the Christian church, many are sufficiently enlightened to see the absurdities of Buddhism, and to withhold their offerings from the priests.

At present there is no Episcopal church in Kandy, the Court House being used for public worship. One however is in course of erection, the first stone of which was laid by the Bishop of Madras, on the 16th of March last. The erection of a Scotch Church is also in contemplation, but the building has not yet been commenced. There is a Baptist Chapel in which divine service is held three times every Lord's day; in the morning in Portuguese and Singalese, and in the evening in English. In a school room, belonging to the Church Missionaries, divine service is conducted in Singhalese, twice every Lord's Day; and a weekly service in English on Thursday evening, has lately been commenced. Connected with the Church Mission, there are 14 Native Catechists and School Masters and with the Baptist, 12. There are four Schools, (besides those connected with the Regiments,) in which instruction in the English language is imparted; viz. for boys, the Government, Church Mission and Baptist Mission Schools, and a girl's School connected with the Baptist Mission, in which 37 scholars receive daily instruction from Mrs Birt and Mrs. Dawson. An interesting school has till lately been conducted by Mrs. Oakley, in which, 14 girls received board, lodging, clothing, and education in the Sinhgalese language, gratuitously. This has been reluctantly broken up in consequence of the ill health of Mrs. O.

There is a Roman Catholic Church, in which service is regularly performed.

A Printing Office, connected with the Baptist Mission, was opened in March 1841, and now employs 2 presses and 7 workmen, in printing tracts, school books, and works for the public. Book binding is also performed.

There are 2 Libraries in Kandy; one belonging principally to the Officers of the Regiments, the other established on more general principles, and open to all respectable subscribers. An Agricultural Society was formed in 1841, and it is hoped will be of great advantage to the Native and European proprietors of land, as well as the public generally. The Governor is patron.

Branches of the Ceylon Bank and the Bank of Western India, have recently been opened, and there are two respectable Hotels.

The Friend in Need Society established in 1837, has been a great blessing to the town. Its object is to relieve the indigent and afflicted. For the latter a hospital was erected in 1840.

The climate of Kandy is cooler than that of Colombo, and is found to agree with European constitutions as well as any part of India. All kinds of provisions, however, as well as house-rent and labour, are very dear.

The beautiful lake on one side of the town is an attractive object. A carriage road, $2\frac{1}{4}$ miles in length, which circumscribes it, affords a pleasent morning and evening walk or drive.

Surrounding Kandy, within a semi-diameter of 30 miles, there are more than 100 coffee estates and a few sugar plantations. On these, European superintendents reside, and many thousands of Tamil coolies from the coast of India find employment.

A journey from Kandy to Colombo may now be performed in eleven hours, by coaches, of which there are two running daily. The fair is £2 10 0.

Goods are conveyed to and from Colombo by bullock bandies, of which there are always hundreds on the road.

The Protestant Ministers and Missionaries at present residing in Kandy are the following.

Rev S. O. Glenie, *Colonial Chaplain.*
" W. Oakley, *Church Missionary.*
" C. Greenwood, *Ditto.*
" C. C. Dawson, *Baptist Missionary.*

---

[On the want of truth among the Hindus.]

உதயதாரகையை நடாத்துந் துரையவர்களுக்கு வந்தனம்.

கனம்பொருந்திய ஐயாவே,

முற் காலங்களில் இருந்த அஞ்ஞானிகளிற் சிலர் தங்கள் தங்கள் பிரியத்தின்படியே செய்து வைத்த நூல்களையும் அவர்கள் செய்கைகளையும்நாங்கள் மெய்நூலெனவும் நற் செய்கை எனவும் நினைத்து மோசம்போகிறோம். பொய் சொல்வது பாவமென்று சிறு பாலகர்களுக்குந் தெரியுமே. பிராமணுக்களை ஒரு மோசத்தில் இருந்து தப்புவிக்கும்பொருட்டாயும் பசுமாட்டைக் காக்கும் பொருட்டாயும் யாவருடையவும் ஆத்துமாவை இரட்சிக்கும்பொருட்டாயும் பொய் சொல்லலாமெனச் சிறிது தமிழ் நூல்களிற் சொல்லியிருக்கின்றதே. இது தான் நம் எண்ணத்துக்கு இசைந்ததென எண்ணி இக்காலத்தில் இருக்குஞ் சிறிது வியாபாரிகளும் பொய்சொல்லாது பிழைப்பது வியாபாரமுறைக்கு முடியாதென்று அனேக

ம பொய்களைச் சொல்லுகிறார்கள். இதற்குத் திருட்டாந்தமாய் நரங்கள் புடைவை பாக்கு முதலிய சாமான்களை வியாபாரிகளிடத்தில் வாங்கினாற் பிழைப்புக்கடுத்த பொய்களில் அனேகத்தை அவர்களிற் காண்போம். நாட்டுக்கோட்டையாரிடத்திற் போய் ஒரு வேட்டி தரும்படி கேட்டால் அவர்கள் போனவனுக்கு வெகு சங்கைபண்ணி முன்னூறு சத்தியங்களைப்பண்ணி இதுதான் உண்மையான விலை என்று ஒரு நிமிஷத்துக்கு இரண்டு விலை சொல்லியுங் கொள்விலைக்காரன் கேட்ட விலைக்கே கொடுப்பார்கள். ஐயா! ஒரு வேட்டிவிற்க முன்னூறு பொய்களேன். இங்கிலீசு வியாபாரிகள் செய்வது போல ஒரு முறையில் விலையையும் அதன் லாபத்தையும் உண்மையுடன் சொல்லிக்கொடுத்தால் இதிற் பாவமாவென நாம் கேட்டால் அது துரைமார் அல்லாமல் எங்களால் முடியுமோவென வீண்போக்குச் சொல்லுகிறார்கள். ஏன் கறுத்தவர்கள் தானும் இங்கிலீசுக்காரரைப் போல வியாபாரம்பண்ணவில்லையாவென வினாவினால் அது எங்கள் சாதிக்காரரால் முடியாதெனச் சொல்லுகிறார்கள். கறுத்தவர்களுக்குள் வறுமையுற்றோர்க்கொரு வங்கமாயுந் துரைச்சிங்கமாயும் வத்தகருக்குள் உத்தமனாயும் வண்டமிழ்க்கரை கண்டவனாயும் மிகு புகழ்கொண்டவனாயும் இருக்கும், ஸ்ரீ. ஸ்ரீ. ஆறுமுகஞ் செட்டியார் குமாரன் முத்துவேலுத்துரை பண்ணுங் கச்சவடங்களை நீங்கள் காணவில்லையா? எத்தனை ஆயிரம் பவுண் பெற்ற சாமான்களின் விலையைக் கேட்டாலும் ஒரே முறையில் இன்னது விலை இன்னது லாபம் பிரியமானால் எடுமென்கிறார். இவர் பொய் சொல்லி வியாபாரம்பண்ணித்தானோ இவ்வளவு பணக்காரனாயும் நேர்மையுள்ளவனாயும் இருக்கிறாரென்றால் அது முத்துவேலுத் துரை பண்ணும் வியாபாரம் எல்லாம் இங்கிலீசுக்காரத் துரைமாரோடு புழங்கி விற்பனவு கொள்வனவு பண்ணுவதால் அப்படி நேர்மையாய் இருக்கிறாரென்பார்கள். பின்னை இவருடைய தகப்பன், ஸ்ரீ. ஸ்ரீ. ஆறுமுகஞ் செட்டியாரும் புகையிலை வியாபாரத்தில் நேர்மையாயிருக்கிறாரேயென்றால் அவர் கோடி ஸ்ரீமான் பொய் ஏன் சொல்லுகிறாரென்பார்கள். இன்னும் இவர்களுடைய கணக்கப்பிள்ளை காரியகாரரும் அப்படித்தான் நேர்மையாயிருக்கிறார்களே என்றால் இவர்களையல்லாமல் யாழ்ப்பாணத்தில் மற்றும் பிரபுக்களும் முத்துவேலுத் துரையைப் போலே நேர்மையாய் வியாபாரம்பண்ணுகிறார்களா எனப் போக்குச் சொல்லுகிறார்கள். ஐயோ! உதயதாரகையின் எட்டிற்றாத் துரையவர்களே எம்மூரவர்கள் இப்படியே கேட்டதற்கு மறுமொழியைச் சொல்லிக்கொண்டு தாங்கள் இன்னும் முன்னிருந்த நிலைபரத்திலிருக்கிறார்கள். அன்றியும் கறுத்தத் தோலுக்குள்ளே உண்மை இல்லை. கறுத்தவர்களுக்குள் உண்மையான தெய்வபத்தி இல்லை. ஒன்றித்த ஐக்கியம் இல்லை. ஒருவனை ஒருவன் கெடுக்கவும் ஒருவன் ஆஸ்தியை ஒருவன் வீணாய் அபகரித்துக்கொள்ளவும்வேண்டுமென்று முயற்சிபண்ணுவதல்லாமல் தாங்களுஞ் சீர்திருந்த நினைக்கிறார்களா? இதென்னப்பா! ஒரு கறுத்தவன் டிஸ்திறிக்கோட்டு நீதவானானாற் சந்தோஷப்படுவதன்றிப் பொறுமைகொள்ளுகிறோம். மற்றவன் தன் பணத்தைச் செலவிட்டு இரணைக்குதிரை வண்டிவில் வந்தால் அவன் வண்டில் எங்கள் மார்பிலே ஓடித்திரிந்து வருத்தப்பட்டுவது போல வருத்தப்பட்டு அக்கினிப் பொறி சிந்தப் பார்த்து நெட்டுயிர்ப்பெறிந்து தம்பி வண்டிவில்லாமல் நடக்கமாட்டார். இதெல்லாம் அடக்கிப்போடுகிறேனெனச் சபதஞ் சொல்லித் தன் ஆஸ்தியை விற்று அடாததைச் செய்து ஒருவனைக் கெடுக்க எண்ணுவதுமல்லாமல் தாங்களும் படித்து நல்லுத்தியோகங்களைப் பெறவேணுமென்று நினைக்கிறதில்லை. நாம் ஒருவனைக் கெடுக்கவெண்ணுவது சரியா? அப்படிச் செய்வது சரியல்லவே, பின்னை எப்படித்தான் சீர்திருந்தப் போறோம். மற்றவர்களைப் பார்த்து நாம் சீர்திருந்தவேணுமல்லவா? உலகத்தை நோக்கிப் பார்க்கும்பொழுது இப்பொழுது தலைப்படும் வத்தகர்கள் சொல்வது எல்லாம் பொய்யுஞ் செய்வது பொல்லாப்புமன்றி வேறென்னத்தைக் காண்கிறோம். இங்கிலீசு இராச்சியம் பெருகுவதின் காரணமென்ன? அவாகள் உண்மையான மார்க்கத்தை அனுசரிக்கிறார்கள். அவர்களுக்குள் ஒன்றித்த ஐக்கியம் இருக்குது. பொறுமை சற்றும் இல்லை. அவர்களுடைய நியாயப்பிரமாணமோ இராக்கினியவர்களையும் குடியானவனையும் பொல்லாப்புக்கண்டவுடன் கண்டிக்கத்தக்க வல்லமையுள்ளதாயிருக்குது. கிறிஸ்துமார்க்கம் இங்கிலீசு இராச்சியத்தைப் படர்தடியாய்க்கொண்டு எங்கும்படருகுது. கிறிஸ்துமார்க்கம் எங்கே பரம்புகுதோ அங்கெல்லாஞ் சத்தியம், சீர்திருத்தம் மிகுதியாய் உண்டுபடுகின்றது. ஆகையால் வாசிப்பவர்களே சகலருந் தெண்டித்துக் கறுத்தவர்களையுஞ் சீர்திருத்தப் பிரயாசப்படுங்கள்.

இப்படிக்கு

யாழ்ப்பாணம் சுண்டிக்குழி, மாசிமாதம் உரு. திகதி. } தமது பணிவிடைகாரன் பொய்யை வெறுத்தோன்.

---

MR. EDITOR:

As many of your readers are studying the English language, I beg leave to present them with a collection of sentences illustrating certain uses of the particle *to*, if you think it worth insertion. N.

He lived *to* a good old age
They do it *to* this day
They held out *to* the last
The story affected them *to* tears
They would resist, even *to* blood
Have things come *to* that pass!
They were shot down *to* a man
He is honest *to* a pice
They lost every thing, even *to* their shoes
What is the Portuguese power *to* the English?
What is money *to* a clear conscience.
In science his father is a child *to* him
This is nothing *to* it
What is that *to* this?
*To* my surprise, I found him well
He has tried it *to* his sorrow
If you do it, you will do it *to* your loss
He did it *to* his cost
They found the child, *to* their great joy
It is built open *to* the south
He lives forty miles *to* the west
We kept *to* the north of the island
What would they say *to* that?
His answer is not *to* the point
Something was said *to* that effect
*To* such a charge I say nothing
He has no right *to* it
There is no substance *to* it
It is a shame *to* him
I have done it *to* the best of my ability
It is so, *to* all intents and purposes
I know of nothing *to* the contrary
*To* all appearance, he was doing well
It is all *to* no purpose
*To* what end is all this?
It is greatly *to* his credit
I have done more *to* it than you
It will be remembered *to* their shame
Man is born *to* trouble
He is born *to* trouble
He is born *to* a great fortune
Put this *to* my account
They are made *to* order
I will keep you *to* it
He was a party *to* it
Keep it *to* yourself
I have a room *to* myself
They want it all *to* themselves
I have not a shirt *to* my back
He is every thing *to* us
She is a mother *to* them
Nothing could move him *to* it
When are turned out *to* grass?
This cloth won't cut *to* advantage
He called him a scoundrel *to* his face
What is that *to* me?
It is a quarter *to* six
*To* me, there is something strange about this
A true Christian does not live *to* himself
If you lose by it, I will make it up *to* you
He went *to* bed, but not *to* sleep
They are always passing *to* and fro
Every one *to* his liking
*To* it they went, and gave each other bloody noses
If you do so again, I shall take a stick *to* you
This is not *to* my taste
This is every way *to* my mind
They danced *to* the *tune* of Yankee Doodle
By the reformation, several kingdoms were lost *to* the Pope
Since you cannot avoid it, you may as well make up your mind *to* it

---

*For the Morning Star.*

MR. EDITOR: On the 12th page of the Hindu Traveller I notice this error: "The passengers *laid* down, and went to sleep." The past of the transitive verb *to lay* is *laid*, as: They *laid* down their arms. She *laid* her child on the bed. But, of the intransitive verb *to lie*, the past is *lay*: They *lay* down to sleep. But the transitive verb may be used, if followed by a pronoun: They *laid themselves* down to sleep. Or, as in the well known child's evening prayer,

"Now I lay me down to sleep." A.

---

[On the unmeaning ceremonies of the Hindus.]

அஞ்ஞானம்போக அறிவித்தல்—மெஞ்ஞானமாகத்தெரிவித்தல்.

சிக-ராசபூசிதமகா. ஸ்ரீ. ஸ்ரீ. தாரகாபதியர்களுக்குவணக்கத்துடனே தெண்டனம்-மகா இணக்கத்துடனே விண்டனம்.

ஐயாவே,

மெய்யாக இவ்வுலகத்தாருக்குள் நடக்கும் முக்கியமான காரியங்களைக் குறித்துச் சில காரியம் எழுதத் துணிந்தோம். அவையாவன, கவது. மனிதர் மரித்துப்போனால், அந்த வீட்டிற் பிரவேசி

ப்பது தீட்டென்றும், தலைமுழுகி வஸ்திரங்களைந்து வைத்துப்போடாததனாற்றீட்டுண்டென்றும், ௨.வது. தலை முழுகிக்கட்டியிருந்த வஸ்திரங்களைந்து வைத்துப்போடவேண்டுமென்றுஞ் சொல்லுகிறார்களே. ௩.வது, பள்ளுப் பறை முதல் மற்றக் கீழ்சாதியாரைத் தொடுவதினாற்றீட்டுண்டென்றுஞ் சொல்லுகிறார்களே. நாலாவது, பறையர் நெசவுசெய்யும் புடைவைகளை வாங்குவதினாற்றீட்டுண்டென்றும், அப்புடைவையைத் தண்ணீரில் நனைத்து வீட்டிற்கொண்டுபோகவேண்டுமென்றுஞ் சொல்லுகிறார்களே. ஐந்தாவது, பிறருடைய எச்சிலைத் தொட்டாற்றீட்டுண்டென்றும், ஸ்நாணம் பண்ணவேண்டுமென்றுஞ் சொல்லுகிறார்களே. ஆறுவது, கடைக்கு அல்லது சந்தைக்குப் போனால் அவ்விடத்தில் நாலு வகைச் சாதியாரும் வருவதினாலே தீட்டுண்டென்றும், குழிக்காமலும் உடைமாற்றாமலும் வீட்டிற் பிரவேசிக்க கூடாதென்றுஞ் சொல்லுகிறார்களே. ஏழாவது. பிள்ளைப் பெற்றாற்றீட்டுண்டென்றும், பெற்றவளிருக்குமறையிற்பிரவேசித்தாற் தலைமுழுகித்தீட்டை அகற்றவேண்டுமென்றுஞ் சொல்லுகிறார்களே. ௮வது, பெண்பிள்ளைகள் நிருதுவானாற்றீட்டுண்டென்றும், முதலாம் விசையில் அவளை வீட்டைவிட்டகற்றிப் புறம்பே அவளுக்கொரு குடிசைகட்டியதில் வைத்துப் பத்துப் பதினைந்து நாட் சென்ற பின் அவளைக் குழிப்பித்துச் சில சடங்குகள் செய்து வீட்டிற் கூட்டிக்கொள்ளவேண்டுமென்றுஞ் சொல்லுகிறார்களே, ௯வது. பெண்பிள்ளைகள் மாதந்தோறுஞ் சூதகமானாற்றீட்டுண்டென்றும், அவளை வீட்டைவிட்டு வெளியில் மூன்று நாள் இருந்து நாலாநாள்த் தலைமுழுகி வீட்டிற்பிரவேசிக்கவிடவேண்டுமென்றுஞ்சொல்லுகிறார்களே. ௰வது. மேல்சாதியானவன் கீழ்சாதியானவன் வீட்டிற் போசனபானம்பண்ணினாலும், அல்லது கீழ்சாதியான பெண்களைச் சேர்ந்தாலும் அவன் தீட்டுப்பட்டவனென்றும், அவனைத் தங்களினத்திற் சேர்க்கக்கூடாதென்றும், சேர்க்கவேண்டுமானால் அவனுக்குப் புகைத் தண்ணீரூற்றிச் சாணியைக் கரைத்துத் தலையிற்றெளித்து மாட்டுக்கோமயத்தைக் குடிப்பித்து மூன்று நாள் அவனை வெளியே நிறுத்திப் பின்பு அவ்வகைச் சாதியான குருமார்கள் சில சடங்குகள் செய்து புண்ணியதானம்பண்ணி அவனிடத்திற் பொருளை வாங்கிக்கொண்டு சாதியிற் சேர்க்கிறார்களே. இன்னும் அனேகவிதமான தீட்டுண்டென்றும், அவைகளுக்குத்தக்க சாஷதிரஞ் செயயவேண்டுமென்றுஞ் சொல்லுகிறார்களே, இவை முற்றும் நாங்கள் பொய்யென்றுதள்ளுகிறோம். பத்துக்கற்பனையிற் சொல்லிய பொய், களவு, விபசாரம், கொலை இவையே தீட்டென்றுங்கொள்ளுகில், இது அறியாதபேர்கள் மெய்யைப் பொய்யாக்குகிறார்கள். பொய்யை மெய்யாக்குகிறார்கள். அப்படிச்செய்வது மெய்யோ, சத்தியவேதத்தை நன்றாய்க் கூர்ந்து பார்த்தால் இது எல்லாம் வீணான பொய்யே. மத். ௰௫. அதி. ௰௧, ௰௭, ௰௮.ம் வசனங்களில் வாய்க்குள்ளே போகிறபொருள் ஒருவனையும் அசுசிப்படுத்தமாட்டாதென்றும், வாயில் இருந்து புறப்படுகிறபொருளே அசுசிப்படுத்துமென்றும் எழுதியிருக்கின்றது. ஆனதால் இதை அறிந்து நாங்கள் உண்மை பற்றினம, ஆகையால அப்படிச் செய்துவரும் பேர்களுக்கு ஆண்டவர் கிருபை செய்வாரென்றும் நம்புகிறோம்.

இப்படிக்கு

திண்டுக்கல் ௲௮௱௪௪ம் ஆ. சினவரி மாதம்

JOHN DAVID ANTHONY.

[Explanation of the verse requested in No. 3. Vol. 4. page 28 by C. L. C.]

அரிநிறந் தங்குமரியது பூண்டவரியில்வரும்
அரிபுதல்வன்றனரியாமருமகன்றன் சிரத்தை
அரியவென்றெண்ணியரிசரமேவுமரியினைகண்
டரிமதன்றன்னை யரியுடனேயரிதாழ்த்தனனே.

அரி-பொன்னினது, நிறம்-காந்தி, தங்கும்—நிலைபெற்ற-அரியது மாலையை, பூண்ட-தரித்த, அரியில்-கிளியில், வரும்-ஏறிவரும், அரி—மாவினது, புதல்வன்-குமாரன், தன்-தனது, அரியாம்-சத்துருவாகும், மருமகன்-மருமகனுகுமாரன், தன் சிரத்தை-தன்யோகத்தை, அரியவென்றெண்ணி-அழிக்கவென்று கருதி, அரி-கூர்மையுடைய, சரம்-அம்பை, ஏவும்-ஏவுதற்செய்யும், அரியினை கண்டு-பகைதொழிலை அறிந்து, அரி—பரமசிவனானவர், மதன்றன்னை—மன்மதனை, அரியுடனே—அம்புடனேகூட, அரிது—சங்கரித்து, ஆழ்த்தனன்—அவசெயத்தை அடையும்படி செய்தான்.

ஏகாரம் இற்றசை, அரியையென்னும் இரண்டாம் வேற்றுமை உருபுமயங்கிநின்றது. இதற்கு அரிந்தென்பது அரிதெனத்தன்னகரந் தொக்கு நின்றது. சிரமென்பதாகுபெயராய் யோகத்தை உணர்த்தி நின்றது. அரி என்பது வட மொழியில் ஈசுரனை உணர்த்தி நின்றது. இதற்கு எழுவாய் அரியென்னுஞ் சொல். செயப்படுபொருள் பகைதொழிலுணர்த்தும் அரியெனுஞ் சொல்லும் மதனெனுஞ் சொல்லுமாம். ஆழ்த்தனன் பயனிலை. இதன் கருத்து பரமசிவன் காமன் பகையை அறிந்து எரித்தாரென்னும் பொருள் தோன்றியது.

[ An explanation of the following verses is requested.

கருங்கலசக்கொங்கையக்கொங்கை இக்கொங்கை கங்கை கொங்கை
கருங்கலசக்கொங்கையக்கொங்கை இக்கொங்கைகங்கை கொங்கை
கருங்கலசக்கொங்கையக்கொங்கை இக்கொங்கை கங்கை மங்கை
கருங்கலசக்கொங்கையக்கொங்கை காட்டுங் கழுக்குன்றமே.

கரும்பங்கையமஞ்சுபிஞ்சஞ்சு பூவஞ்சு காயுமஞ்சு
கரும்பங்கையமஞ்சுபிஞ்சஞ்சு பூவஞ்சு காயுமஞ்சு
கரும்பங்கையமஞ்சு பிஞ்சஞ்சு பூவஞ்சு காயுமஞ்சு
கரும்பங்கையமஞ்சு பிஞ்சஞ்சு காட்டுங் கழுக்குன்றமே.

இப்பாட்டுக்களின் பயன் என் சிற்றறிவுக்கு விளங்காமையாற் கற்றறிந்த வல்லோர் இவகைளின் பயனை உதயதாரகை வழியாய் அறிவிக்கக்கோருகிறேன்.

Combaconum, Pettah School, 10th March, 1844. } M. CANAKASABAPULLEY.

## கணக்கு வினா.

ஒரு செட்டியாருக்கு இரண்டு குழந்தைகளுண்டு. மேற்படி செட்டியாரிடத்தில் விராகன், ௰௫. வீதமாய் முடிப்பு ௫1 விராகன், ௯. வீதமாய் முடிப்பு ௫1 விராகன், ௬. வீதமாய் முடிப்பு, ௫. விராகன், ௧.ல் முடிப்பு, ௧. ஆக முடிப்பு, ௭௫.க்கும் இருக்கும் விராகன், ௱. மேற்படி செட்டியார் மரித்தவுடனே பிள்ளைகள் இருவரும் சரிபங்காக முடிப்புடையாமற் பிறிக்கவேண்டுவதாகையால் இத்தைப் பிறித்தனுப்பும்படி பிராத்திக்கிறேன்.

இப்படிக்கு தென்னாட்டுச் சேகரம் எங்காடு செட்டி

Private School, நாயக்கன்பட்டி.

Dindigul, 8th March, 1844. M. ANTHONY.

Answer to the Arithmetical query found in the 4th Number of Volume IV. and another query propounded.

தாரகை சம்புத். ௪ சஞ். ௫௯ம். பக்கத்தில் கேட்டகணக்குவினாவிற்கு விடையாவது.

பொன் களஞ்சு அஞ்சென்றும் அதற்கு எதிர்த்தட்டிலே ஆறுகளஞ்சுபடியென்றும் தராசு நாச்சமணிலே நில்லாததற்கு பொன்னிலே ஒரு களஞ்சு கற்போட்டதென்றும் போட்டதை எடுத்து எதிர்த்தட்டிலேசேர்க்க ஏழுகளஞ்சு ஆச்சுதென்றும் இந்த விபரத்திலே இருந்த பொன் அஞ்சுகளஞ்சென்று கண்டது.

### வேறொருவினா.

௯௰. மாற்றுள்ள சிலபொன்னில ஆறுகளஞ்சு வெள்ளிசேர்க்க, ௭௫. மாற்றுக்கண்டான், இருந்த பொன் களஞ்சு எத்தனை?

### மறுபடி ஒருவினா.

ஒருகிராமத்தில் சொற்ன ஆதாயம் ரூபா. ௫௬ இந்த ரூபா.௫௬க்கும் மூன்றில் ஒருபங்காளியும் நாலில ஒருபங்காளியும் ஆறில் ஒருபங்காளியும் இருந்தார்கள். இந்த மூன்றுபேரும் மேற்படி ரூபாக்களைப்பிரித்துக்கொள்ளத் தெரியாமற் கணக்காசாரப்படிக்குப்பிரித்துக்கொடுக்கும்படி மன்றாடுகிறார்கள். இப்படிக்கு,

௲௮௱௪௪ ஆ மார் கழி ௴ ௰௫தீ. } ருசகோபாலன்செட்டியார். மதுரை.

*Birth.*—At Jaffna, on the 27th instant the lady of Sooproomanyer Mudeliar Savaremoottoo, Aaratchy of the Agent's Office, of a son.

## அறிவித்தல்.

௲௮௱௪௪ம். ௵. ஆடி ௴. முகனையாக ௲௮௱௪௫ம். ஆண்டு, ஆனி மாதம் ௩௰ந். திகதி வரைக்கும் மன்னார், நுகரைக்கலாவைப் பகுதிகளின் சாராயங்களுக்குத்தகையை இதனடுத்த சித்திரை மாதம், ௰ந். திகதியாகிய புதன் கிழமை மன்னார் கச்சேரியில் எலங் கூறிவிற்கப்படும். குத்தகைகாரன் தான் தானே சாராயஞ் சம்பாதித்துக்கொள்ளவேண்டியது.

யாழ்ப்பாணங் கச்சேரியில்
௲௮௱௪௪ம் ௵. பங்குனி௴
௨௭ந். திகதி.
E. H. SMEDLEY,
ஏசன்று.

---

### அறிவித்தல்.

௲௮௱௪௪ம். ஆண்டு, ஆடி மாதம் முகனையாக, ௲௮௱௪௫ம். ஆண்டு, ஆனி மாதம் ௩௰ந். திகதி வரைக்கும் யாழ்ப்பாணம் வன்னிப்பற்றுச் சாராயங்களுக் குத்தகையை இதனடுத்த சித்திரை மாதம், ௰ந். திகதியாகிய புதன் கிழமை, யாழ்ப்பாணங் கச்சேரியில் எலங்கூறி விற்கப்படும். குத்தகைகாரன் தான்தானே சாராயஞ் சம்பாதித்துக்கொள்ளவேண்டியது.

யாழ்ப்பாணங் கச்சேரியில்
௲௮௱௪௪ம். ஆண்டு, பங்குனி
மாதம், ௨௭ந். திகதி.
E. H. SMEDLEY,
ஏசன்று

---

### அறிவித்தல்.

௲௮௱௪௪ம். ஆண்டில் நடப்பிக்கப்படும் பொதுச்சொந்தை உள்ள வேலைக்கு இதன் பின்னுற் சொல்லப்படுகிற சாமான்களைக் கொடுக்கப்பிரியமுள்ள பேர்களிடம் ஏசன்றுத் துரையவர்கள் இந்த மாதம், ௨௮. திகதி வரைக்கும் புறப்போசல் வாங்குவாரென்றித்தால் அறிவிக்கப்படுகுது.

மாமுநகைக் கல்விற் சுட்டு நல்ல தண்ணீர் விட்டுப் பூர்ப்பித்த சுண்ணும்பு இது சிவில் இஞ்சினீர்க் குதத்தில் அல்லது சீதாரியிலேதொரு இடத்தில் அல்லது இதின் பின்னுற் காணப்படுகிற தெருக்களிற் சில இடங்களிற் கொடுக்கலாம். அதாவது,

சாவுகச்சேரித் தெரு, பருத்தித்துறைத் தெரு, மல்லாகத் தெரு, சங்கானைத் தெரு, வட்டுக் கோட்டைத்தெரு.

யாழ்ப்பாணத்திலும் மற்றும் ஒவ்வொரு தெருக்களிற் பலபல இடங்களிலும் ஒப்புவிக்கிற சுண்ணும்பு இன்ன இன்ன விலைக்குக் கொடுப்பதென்றும் தெருவில் இத்தனைபாங் கட்டையிற் கொடுக்கிறதென்றும் காட்டி எழுதியிருக்கவேண்டியதுமல்லாமல் விலைப் பருவம் வுசல் ஒன்றுக்கு இன்னதென்று காணவேணும்.

மணல்.—மண்ணித்தலை மணல்,
பாவி ஆற்று மணல்.—வுசல் ஒன்றுக்கு விலை,
பனைங்கட்டி.—அதின் மாதிரி கறண்டகக் குட்டான்,
ஆட்டுக்காற் குட்டான்.—இருத்தல் ஒன்றுக்கு விலை,
இரும்பு.—நல்ல இரும்பு இதின் பின்னுற் கண்டெழுதியிருக்கிற மாதிரிப்பட்டது
அகலச்சிலாகைமுத்திரைஉள்ளது அல்லதுவாய்ச்சிவெட்டுள்ள சிலாகையாய்ச் சதுரக் கம்பிமேற் கண்ட அடையாளமுள்ளது. ஒடுக்கச் சிலாகை மேற் கண்ட அடையாளமுள்ளது.
காய்ப்பிரும்பு.-இதவுஞ் சிலாகை சதுரக்கம்பி திரண்டபலமாதிரியான கம்பியுள்ளதும், இதின் விலை இருத்தல், ௧. க்கு இன்னதென்று.
குழைசுண்ணும்பு.-சிப்பிச் சுண்ணும்பு வுசல், ௧. க்கு இன்ன விலையென்று.
வீடு மூடுகிற ஓடு.—வடக்கத்தை ஓடு, ௮இ. அங்குலத்துக்குக் குறையாத நீளங்கொண்டதும் அகன்ற புறத்தில், ௯. அங்குலமும் ஒடுக்கப் புறத்தில், ௫. அங்குலமுங்கொண்ட நல்லாய் வெந்த ஓடாய் இருக்கவேணும், ௲. க்கு விலை,
தட்டை ஓடு.—தழுவிசை மாதிரியானது, ௯. அங்குல நீளம், ௯. அங்குல அகலம், ௧. அங்குல கனம், ௫. அங்குல நீளம், ௬. அங்குல அகலம், ஒன்றேமுக்கால் அங்குலங் கனங் கொண்டதாய் நன்றாய்ச் சுடுபட்ட நேர்த்தியான மாதிரிகொண்டது, ௲. க்கு விலை,

யாழ்ப்பாணம் கச்சேரியில்
௲௮௱௪௪ம். ௵. பங்குனி, ௴, ௨௫. திகதி.
E. H. SMEDLEY,
ஏசன்று.

---

## TAMIL CALENDAR for 1844—5

Just published and for Sale at the American Mission Press Manepy; and by the Rev. N. M. Crane, Madura; Price 3 pence or 2 Annas, a single copy, 15 shillings or 7½ Rupees per 100.

---

### CONTENTS.


| | | | |
|---|---|---|---|
| Beschi's Spiritual Instruction | 49 | Panchangam - - | ib. |
| Christian Poetry in Tamil | ib. | Brief Sketch of Kandy - | 57 |
| Pancha-Tantra-Katei - | 50 | On the want of truth among the Hindus - - - | ib. |
| The Just Judge - - | 50, 56 | Uses of the particle *to* - | 58 |
| A case in law - - | 51, 56 | Grammatical error found in the 12th chap. of Hindu Traveller | 58 |
| Dormant Resources of Ceylon | 52 | On the unmeaning ceremonies of the Hindus - - | ib. |
| Obituary - - - | ib. | Explanation of a verse requested by C. L. C. - - | 59 |
| Rationality of Christian Religion | ib. | Explanation of certain verses requested - - | ib. |
| Summary of Eng. Intelligence | ib. | Arithmetical queries - | ib. |
| Summary of Tam. " | 53 | Notices - - - - - | 60 |
| The Observer, No. 2. | 54–55 | | |
| Mathematical query - | 55 | | |
| Biblical query - - | ib. | | |
| Poetry—The Song of the River | 55 | | |
| Afraid to learn - - | ib. | | |


Printed and Published at the American Mission Press, Jaffna, by Eastman Strong Minor.